Registered as a News paper in Ceylon விலை சதம் 10



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 19 [16-6-67] இதழ் 125
பிலவங்க ஆனி 2 ரபி அவ். 7 வெள்ளிக்கிழமை



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

### ஜி. ஜி. பொன்னம்பலம் கூறுகிறார்

# "பதவியைக்கூட ராஜினமா செய்யத் தயார்

## முழு உரிமையுள்ள மாவட்டசபைகிடைத்தால்"

யாழ்ப்பாணம், வெள்ளி

முழு அதிகாரங்களும் உள்ள மாவட்ட சபை மசோதா வருமானல் அதை தாம் ஆதரித்து வாக்களித்து விட்டு, பதவியையும் ராஜினமாசெய்யத் தயாராய் இருப்பதாக திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினர்.

நீர்ப்பாசனம், கல்வி, குடியேற்றம் ஆகியவை சம்பந்தமான அதிகாரங்கள் அடங்கியதாக மாவட்டசபை இருப்பின் தாம் ஆதரிப்பதாகக் கூறிய திரு. பொன்னம்பலம் உத்தேச மாவட்ட சபை வெறும் கண்துடைப்பு என்றும் கூறினர்.

யாழ்ப்பாண நகரமண்டபத்தில் 'மாவட்ட சபையும் தமிழரும்' என்ற பொருள் பற்றி நடைபெற்ற தொழிற்சங்கக் கருத்தரங்கில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசினர்.

அகில இலங்கை அரசாங்க சேவையாளர் தேசிய தொழிற்சங்க சம்மேளனம் நடத்திய இக்கருத்தரங்கத்திற்கு திரு. வி. வேலுப்பிள்ளை தலைமைதாங்கினர்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

''தமிழ்மொழி விசேஷ விதிகள் அமுல் மசோதா தமிழ் மக்களுக்கு நன்மை அளிக்காதென்று தெரிந்த போதிலும் அதனை ஆதரித்து வாக்களித்தேன். காரணம், அதனுல் தமிழ்மக்களுக்குத் தீமை ஏற்படாதென அறிந்திருந்தேன். ஆனுல் மாவட்ட சபை தமிழருக்குப் பெரும் தீங்கை ஏற்படுத்தக்கூடியது. அதனுல்தான் மாவட்டசபைமசோதாவை எதிர்த்து வாக்களிக்கத் தீர்மானித்தேன் இது எனது முக்கிய கடமை.''

உத்தேச மாவட்டசபைக்குக் கிராமசபைக்குள்ள அதிகாரங்கள் கூடக் கிடையாது. மத்திய அரசாங்கத்தின் உரிமைகளை ஒரு போதும் மாவட்டசபைக்கு கொடுக்கமாட்டேன் என பிரதமரே கூறியுள்ளார்.

[8-ம் பக்கம் பார்க்க]

## ஐ. நா. மகாசபை அவசரக் கூட்டம்

### ரஷ்ய கோரிக்கைக்கு ஆதரவு கிடைக்கும

நியுயோர்க், ஜுன் 15

சோவியத்யூனியன் கோரிக்கை மீது ஐ. நா. மகா சபையின் அவசரக்கூட்டம் கூட்டப்படலாமென்று ஐ. நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு ஆசிய நிலைமை பற்றி ஐ. நா. பாதுகாப்பு சபையில் சோவியத்யூனியன் கொண்டுவந்த தீர்மானம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஐ. நா. மகா சபையின் அவசரக்கூட்டத்தைக் கூட்டவேண்டுமென்று சோவியத்யூனியன் கோரியிருக்கிறது. 122 நாடுகள் அங்கம்வகிக்கும் ஐ நா. மகாசபையில் சோவியத் யூனியன் கோரிக்கைக்கு ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் ஆதரவு நிச்சயம் கிடைக்குமென்றும் இதனுல் மகா சபையின் அவசரக்கூட்டம் கூடுவதில் அதிக சிரமம் இருக்கமாட்டாதென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ. நா. மகாசபையின் அவசரக்கூட்டத்தில் சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் கலந்துகொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐ. அ. குடியரசுக்கு

### ரஷ்ய விமானங்கள்

மாஸ்கோ, ஜுன். 15

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு ரஷ்யா 100 சுப்பர் ஸோனிக் விமானங்களை அனுப்பி வைத்துள்ளது. விரைவில் டாங்கிகளையும் ரஷ்யா அனுப்பிவைக்க இருக்கிறது

## யாழ். மாநகரசபை தேர்தல்விரைவில்நடைபெறும்

யாழ்ப்பாணம், வெள்ளி

உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் யாழ்ப்பாண மாநகரசபை வட்டாரங்களை நேற்றுச் சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாண மாநகரசபைக்கு விரைவில்தேர்தல் நடைபெறுமென்றும் அதற்கான ஒழுங்குகளை உள்ளூராட்சி அமைசசு எடுத்துவருவதாகவும் அமைச்சருடன் நெருங்கிய தொடர்புள்ள வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் திரு. டட்லிசேனநாயகா கனடாவுக்கும், ஜப்பானுக்கும் சென்று திரும்பிய பின் யாழ்ப்பாண மாநகரசபை பற்றி உள்ளூராட்சி அமைச்சர் ஓர் அறிக்கையைச் சமர்ப்பிப்பரென்றும் இதன்பின் மாநகர சபைத் தேர்தல் பற்றி திகதி குறிப்பிடப்படுமென்றும் கூறப்படுகிறது.

## இலங்கையில் முதலீடு செய்ய அந்நியர் விருப்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கையின் பொருளாதாரத்தை விருத்திசெய்வதற்காக இலங்கையில் வெளிநாட்டவர் முதலீடு செய்யவேண்டுமென இலங்கையின் சார்பில் வெளிநாடுகளில் செய்யப்பட்ட பிரசாரம் பயனளிப்பதாகவும் இலங்கையில் முதலீடுசெய்வதற்கு பிரபல பிரிட்டிஷ் கூட்டுத்தாபனம் ஒன்று முன்வந்திருப்பதாகவும் சமீபத்தில் வெளிநாடுசென்று திரும்பிய இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சங்கத்தின் பிரதிநிதி திரு. இ. இரத்தினசபாபதி தெரிவித்தார்.

லண்டன் 'பினன்சியல் டைம்ஸ்'பத்திரிகையில் இலங்கையைப்பற்றி சிறப்பிதழ் ஒன்றினை சமீபத்தில் வெளியிடுவித்த திரு. இரத்தின சபாபதி இலங்கையைப்பற்றி வெளிநாடுகளில் தெரியவேண்டியவை இன்னும் அதிகமிருப்பதாகவும் இலங்கையில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப்பெருக்கி ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு வெளிநாட்டின் முதலீடு அவசியமென்றும் முன்னைய அரசாங்கம் பதவியிலிருந்தபோது இங்குமுதலீடு செய்ய அஞ்சிய வெளிநாட்டவர் இப்போது இங்குமுதலீடு செய்ய விருப்பம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

### 'தமிழருக்கு

# துரோக மிழைக்கப்பட்டால் நாம் வெளியேறுவோம்'

### புங்குடுதீவில் எஸ். ஜே. வி.

புங்குடுதீவு, வியாழன்

''தேசிய அரசாங்கத்தின் இரு சிம்மாசனப் பிரசங்கங்களிலும் மாவட்டசபைகள் பற்றித் தெளிவாகக் கூறப்பட்டிருந்தது. அப்போது அதனை ஆதரித்து வாக்களித்தவர்கள் இப்போது எதிர்ப்பதேன்?''

புங்குடுதீவில் நேற்றிரவு நடந்த அமரர் வி. ஏ. கந்தையா நினைவுதினக் கூட்டத்தில் ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் மேற்கண்டவாறு கேட்டார்,

திரு. த. மதியாபரணம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மந்திரி திருச்செல்வம் கூறியதாவது: தமிழரசுக் கட்சியினர் மாவட்ட சபையைக்கோரிவருவதால் தான், தமிழ்க்காங்கிரஸார் இப்போது எதிர்க்கின்றனர். வேறு காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நீண்ட காலமாக நாம் பல்கலைக் கழகம் வேண்டுமெனக் கோரிவந்தோம். இதை எதிர்ப்பதற்காகத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திடீரென இந்துப் பல்கலைக் கழகம் கேட்டார். இதனுல் எதுவும் பெறமுடியாமற்போய்விட்டது.

ஊர்காவற்றுறை எம். பி திரு. வி. நவரத்தினம் கூறியதாவது: தமிழரசுக்கட்சியின் லட்சியங்களை யார் கைவிட்டாலும் தீவுப்பகுதி கைவிடாது. நெருப்பு அணைந்தாலும் ஒரு பொறி தெறித்து மீண்டும் நெருப்பை வளர்க்கும். கடைசிப்பொறி தீவுப்பகுதியில் இயங்கும். தமிழரசுக் கட்சியையிட்டு மக்களிடையே அதிருப்திநிலவிவருகிறது. கண்களை மூடிக்கொண்டிருக்கக் கூடாது. இலட்சியங்களை விட்டு வெகுதூரம் போகக்கூடாது தமிழரசுக் கட்சி, மக்கள் இயக்கமாக என்றும் விளங்கவேண்டும்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசும்

[8-ம் பக்கம் பார்க்க]

## 'சிங்களத் தேர்ச்சியில் விதிவிலக்கு வேண்டும'

### சுகாதார சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

'சிங்கள மொழி தேர்ச்சி நிபந்தனை காரணமாக நிறுத்தப்பட்ட வருடாந்த சம்பள உயர்வு மருத்துவ தாதிகள், ஆய்வுகூட ஓடலிகள், என்ஜின் ட்றைவர், மருந்து கலவையாளர் ஆகியோருக்குக்கொடுப்பதன் மூலம் சிங்கள தேர்ச்சியிலிருந்தும் இவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று சுகாதாரமந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் தேசிய அரசாங்க சுகாதார சேவையாளர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில்ஏகமனதாக நிறைவேறியது.

இக்கூட்டம் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நேற்றுக் காலை திரு. வ. பண்டிதர் தலைமையில் ஆரம்பமானது. மட்டக்களப்பு, மன்னர், திருமலை மற்றும் பகுதிகளிலிருந்தும்

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

**லொறி**
நல்ல நிலைமையிலுள்ள ஒஸ்டின் டீசல் [மொக்கன் மொடல்] லொறி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: விக்ரேஸ், 6, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம். 2439

**டிராக்டர்:**
நல்ல நிலையிலுள்ள 22 ஸ்ரீ 6768 போட்சன் டிராக்ரர், 44 ஸ்ரீ 631 (பன்னிரண்டாணி)ற் றெயிலர், ரில்லர்-கலப்பை என்பன புதிய ரயர்களுடன் விற்பனைக்குண்டு. பொ. ஏரம்பு, 9 A, நிக்கலஸ் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 2444

**காணி:**
சரசாலை வடக்கிலுள்ள மரத்தளாயக்காடு (புளியடித்தோட்டம்) என்னும் 10 பரப்பு தோட்டக்காணி தனிக்கிணறுடன் விற்பனைக்குண்டு. கீழ்க்காணும் விலாசதாரருடன் தொடர்புகொள்ளவும்: கதிரவேலு முருகேசர், சரசாலை வடக்கு, சாவகச்சேரி. 2445

**காணி:**
அரைப் பரப்புக் காணி டேவிட் வீதியில் உண்டு. வீடு கட்டவோ, கடைகட்டவோ உகந்தது. விபரங்கட்கு: சின்னப்பு, 28, புது மைமாதா வீதி, யாழ்ப்பாணம். 2441

### தேவை

**ஆசிரியர்:**
மலைநாட்டில் உள்ள ஒரு தனியார் பாடசாலைக்கு பிணைப்பணம் கட்டக்கூடிய எஸ். எஸ். ஸி. சித்தியடைந்த ஆசிரியர்கள் தேவை. 10 சத முத்திரையுடன் 20-6-67க்கு முன் விண்ணப்பிக்கவும். மானேஜர், பாரதி கலாசாலை, வட்டகொடை. 2443

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45
**FROM**
**CHINA with LOVE**

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
ஜெமினி கணேசன்
லலிதா
நடித்த
**வள்ளியின் செல்வன்**


**REGAL - JAFFNA**
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Norman Wisdom
in
**A STITCH IN TIME**

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி—பத்மினி
நடித்த
**தூக்கு தூக்கி**

வியாபாரம பெருக
விளம்பரம செய்க

## இப்பொழுது நடைபெறுகிறது!

**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] **ஈரோஸ்** [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
**விஜயா** [மட்டுநகர்] **ஸ்ரீகிருஷ்ணா** [திருமலை] **மொடேர்ன்** [பதுளை]
**மொடேர்ன்** [பண்டாரவளை] **விஜிதா** [ஹட்டன்] **தீவொளி** [நுவரெலியா]
**கல்யாணி** [நாவலப்பிட்டி]
ஆகிய திரைகளில்
தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
மத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!
நடிக மன்னன் **சிவாஜி கணேசன்,**
நடிக ராணி **கே. ஆர். விஜயா,**
**ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா, நாகேஷ்**



வி. கே. ஆர். பிக்சரின்
# செல்வம்

## கோழித் தீன்

முட்டையிடும் கோழியை திடமாக வைத்திருக்க, முட்டையிட்டு ஓய்ந்த கோழியை முட்டையிடச் செய்ய

- குஞ்சுகளுக்கு
- வளரும் கோழிகளுக்கு
- வளரும் சேவல்களுக்கு

சுத்தமான, நம்பிக்கை வாய்ந்த கோழித்தீன்.

விநியோகிப்பவர்கள்
**எஸ். சேனாதிராசா**
கல்லூரி வீதி,
நெல்லியடி.
**அருணா ஏஜன்ஸீஸ்,**
அளவெட்டி.
2355

## இலங்கை விவசாயிகள் சங்கம்

கொழும்பு, வியாழன்
முன்னாள்பிரதம நீதியரசர் திரு. ஹேமா பஸநாயக்கா தலைமையில், பொதுநல உணர்ச்சி வாய்ந்த சிலர், ஒரு இலங்கை விவசாயிகள் சங்கத்தை உருவாக்கியுள்ளனர்.

தற்போதிலும் பார்க்க அதிக அளவில் உணவு உற்பத்திசெய்ய விவசாயிகளை ஊக்கப்படுத்துவதே, இச்சங்கத்தின் நோக்கமாகும்.

இச்சங்கத்தின் அழைப்பாளர்கள் பிரபலமானவர்கள். திரு. பஸநாயக்கா, திரு. மெரில் பெர்னாண்டோ, திரு. சிறில் கார்டினர், திரு. சேபால குணசேன, திரு. லலித ஹெவாவித்தாரனே, திரு. ஆ. ஜி. ஹினி அப்புகாமி ஆகியோர் இவர்களிற் சிலராவர்.

தனதுநோக்கங்களை நிறைவேற்ற சங்கத்துக்கு நிதி தேவைப்படுகிறது. பொதுமக்களிடமிருந்து நன்கொடைகளை சங்கத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

## சிரமதானத்தில் ஆலயப்பணி

ஊர்காவற்றுறை, வியா.
வேலணை மத்திய கல்லூரி உயர் வகுப்பு மாணவர்கள் நேற்று சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

மாணவர் கோஷ்டியினர் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு சிரமதானம் செய்தனர்.

சரவணை-நாரந்தனை கந்தசுவாமி ஆலயத்தில் சப்பரக் கொட்டகை வேய்தல், பூந்தோட்டத்தைச் சுத்திகரித்தல் ஆகிய பணிகளில் மாணவர்கள் ஈடுபட்டனர். ஆசிரியர் திரு. சந்திரசேகரம் தலைமையில் ஐம்பதுக்குமதிகமான மாணவர்கள் இப்பணியில் ஈடுபட்டனர். புளியங்கூடல் இந்தன்பிள்ளையார் கோவில் சுத்திகரித்தல் பணியிலும் மாணவர்கள் ஈடுபட்டனர்.

## கசிப்பு வேட்டை

மல்லாவி, வியா.
வவுனிக்குளம் 1-ம் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பி. இராஜேஸ்வரனும் யோகபுரம் கிராமசேவையாளர் திரு. வி. நடராசாவும் பொலிஸ் குழுவினரும் மூன்று போத்தல் வடிசாராயத்தைக் கைப்பற்றினார்கள்

## தொழிற்சாலையில் தீ

சாவகச்சேரி, வியா.
மட்டுவில் தெற்கிலுள்ள வாணவெடித் தொழிற்சாலையொன்றில் திடீரெனத் தீப்பற்றியதால் அங்கிருந்த பல மருந்துகள் தீயில் வெந்து நாசமாகின. சுமார் [illegible] வெடிச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

## விளம்பரம்

### கேள்விப்பத்திர அறிவித்தல்

மன்னார்மாவட்டம் இலுப்பைக்கடவை கிராமசபையில் கட்டாடிவயல் முதலியான்கமம் ரேட்டு அமைப்பதற்கான சேவைக்கு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 24-6-1967 காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 23-6-1967-ந் திகதி மாலை 4 மணிக்கு முன் எழுது கிராமசபையில் ரூபா 50/- கட்டுப்பணமாகவும், ரூபா 10/ விண்ணப்பப்படிவப் பணமாகவும் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் பெறுமதி ரூபா 10/-தும் எக்காரணம் பற்றியும் திருப்பிக்கொடுபடமாட்டாது. வேண்டிய விபரங்களை எமது கிராமசபை அலுவலகத்தில் அல்லது மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களின் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம்:
வே. கைலாயபிள்ளை
கி. ச. தலைவர்.
கிராமசபை அலுவலகம்,
இலுப்பைக்கடவை.
13-6-67. 2350

### முல்லைத்தீவு பட்டணசபை கேள்வி விளம்பரம்

1967-ம் ஆண்டு ஆனி மாதம் 25-ந் தேதி காலை 10 மணி வரை முல்லைத்தீவுப் பட்டணசபைத் தலைவரால் கீழ்க் காணும் வேலைக்கான சீல் வைத்த கேள்விகள் இக்காரியாலயத்தில் ரூபா 10-00 கேள்விப் பாரப் பணமாகவும், ரூபா 50-00 வைப்புப் பணமாகவும் செலுத்திப் பெறப்படும் பாரங்களில் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பாரங்கள் 24-6-1967 பி. ப. 3 மணி வரை வழங்கப்படும்.

வேலை விபரம்
1. சின்னத்தங்காடு ஒழுங்கை திருத்துதல்.

அ. சந்தியாபிள்ளை,
தலைவர், பட்டணசபை,
முல்லைத்தீவு.
பட்டணசபைக்
காரியாலயம்.
முல்லைத்தீவு, 10-6-1967.
2356

### தேவை

**முகாமையாளர்**
ஆனையிறவு பலநோக்க கூட்டுறவு சங்கத்திற்கு ஜி. சி. ஈ. சாதாரண சித்தியும், கூட்டுறவுப் பயிற்சியும் அனுபவமும் பெற்ற முகாமையாளர் தேவை. பிணை: ரொக்கம் ரூபா 1000-00 ஆதனம் ரூபா 3000-00. வயது 25க்கும் 40க்குமிடையில். வேதனம் ரூபா 100-00 சகலதும் உட்பட. விண்ணப்பங்கள் 20-6-67க்கு முன் மேற்படி சங்கத்தின் காரியதரிசிக்கு அனுப்பப்படல் வேண்டும். 2353

### தீக்குளிப்பு

புங்குடுதீவு பெற்றுளம் புலம் பேச்சியம்மன் என வழங்கும் ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் ஆலயத்தில் இம்மாதம் 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காவடியோடு தீக்குளிப்பு நடைபெறும்.

சி. ந. கந்தையா.
2340

### BAND பாண்ட்வாத்தியம்

உங்கள் வைபவங்களுக்கு மேளம், கதிரைகள் தற்போது கீழ்க்காணும் விலாசத்தில் கிடைக்கும்.

யாழ். பாண்ட் வாத்தியம்,
191, ஆஸ்பத்திரி வீதி,
2344 யாழ்ப்பாணம்.

### விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்திலே,

கொழும்பு 4, மெல்போர்ன் வீதி, 26-ம் இலக்கத்தில் வசிக்கும் செல்லையா துரைசிங்கம். வாதி.
இல: எம்/3298

எதிராக

1. எஸ் ஜி. அரசரெட்னம், நல்லூர் பயிற்சிக் கல்லூரி, நல்லூர்.
2. எஸ். ஸ்ரீநிவாசன், அதிபர், அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி,
3. டாக்டர் B. செல்லையா, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.

இலங்கை-அமெரிக்கா சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் [முறையே].

பிரதிவாதிகள்

மேற்குறித்த பிரதிவாதிகளுக்கெதிராக, வீட்டு வாடகைப் பணம் ரூ. 4650/- அறவிடும் பொருட்டும், யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத்தெரு, 16-ம் இலக்க வீட்டிலுள்ள பொருட்களை அகற்ருவண்ணம் இடைக்காலத்தடையுத்தரவு கேட்டும் குறித்த வழக்குத் தொடரப் பட்டிருப்பதால் 1967-ம் ஞு ஆடி மீ 18-ந்உ நீதிமன்றத்தில் பிரசன்னமாகும்படி பிரதிவாதிகளுக்கெதிராகக் கட்டளையும், குறித்த பொருட்களை அகற்ருவண்ணம் இடைக்காலத் தடையுத்தரவும்குறித்த நீதிமன்றத்தினுல் பிறப்பிக்கப்பட்டுள்ளதென இத்தால் விளம்பரப் படுத்துகிறேன்.

எ. கோமர் வன்னியசிங்கம்.
வாதியின் வழக்கறிஞர்.
பிரதான வீதி,
யாழ்ப்பாணம், 2352.

### நெசவு நிலையத்தில் திருட்டு

சாவகச்சேரி, வியாழன்
கல்வயல் நெசவு நிலையத்தில் சுமார் 500 ரூபா விலை மதிப்பிடக்கூடிய சேலைகள், சாரங்கள், நூல்பந்துகள், திருட்டுப்போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நெசவுநிலைய ஓட்டைப் பிரித்தே திருட்டுப்போய்விட்டதெனப் பொலிசில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிசார் புலன் விசாரணைசெய்கின்றனர்.

வெளிவந்துவிட்டது!

**உயர்தர தாவரவியல்**
(Advanced Level Botany)
ஆசிரியர்: ம. சிவபாலராசா, Bsc. (spl.) Ceylon
க. பொ. த. உயர்தர வகுப்புக்குரிய இந் நூல்
கலாநிதி S. பாலசுப்பிரமணியம் B sc (spl.) Ph. D.
[தாவரவியல் விரிவுரையாளர்,
இலங்கைச் சர்வகலாசாலை]
அவர்களின் அணிந்துரையைக் கொண்டது
அச்சுப்பதிவு: **ஆசீர்வாதம் அச்சகம்,**
2351 கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபியர்கள் தாயகம் திரும்ப வசதிகள் அளிக்குமாறு இஸ்ரேலிடம் ஐ. நா. கோரிக்கை

## பொதுச்சபையை கூட்ட முயற்சி

நியுயோர்க் ஜூன் 15

இன்று அதிகாலையில், மேற்கு ஆசிய நிலைமையை விவாதிக்கக் கூடிய ஐ. நா. பந்தோபஸ்து சபை, போர்ப் பகுதிகளிலிருந்து தப்பி ஓடிய அராபியர்களுக்குத் தாயகம் திரும்ப வசதிகள் அளிக்குமாறு இஸ்ரேலைக் கோரும் ஒரு தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

ஆர் ஜெண்டீனா, பிரேஸில், எதியோப்பியா ஆகிய நாடுகள் இத்தீர்மானத்தைத் தாக்கல் செய்தன. அத் தீர்மானம், யுத்த கைதிகளைக் கருணையுடன் நடத்துமாறு இஸ்ரேலை மேலும் கேட்டிருந்தது.

இஸ்ரேலை ஆக்கிரமிப்பு நாடாகக் கண்டிக்கும் படியும், அராபிய பிராந்தியங்களிலிருந்து அதன் துருப்புகளை 1949 போர் நிறுத்தக் கோடுகளுக்கு வாபஸ் பெற வேண்டுமென்று கோரும் படியும் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட சோவியத் யூனியனின் தீர்மானம் முன்னதாக நிராகரிக்கப்பட்டது.

போருக்குப் பின் மேற்கு ஆசியாவில் ஐ. நா. பந்தோபஸ்து சபை எடுக்க வேண்டிய முதலாவது நடவடிக்கையை, அது எடுக்க முடியாது செய்திருப்பது சபையில் பிரிட்டனும், அமெரிக்காவும் அனுஷ்டித்த போக்கேயாகும் என சோவியத் பிரதிநிதி திரு. பெரடின்கோவ் பேசுகையில் குறிப்பிட்டார்.

### வேறு நடவடிக்கை

''இதன் பயனாக வேறு நடவடிக்கைகளை ஆராய வேண்டியிருக்கிறது'' என்றார் அவர் 'வேறு நடவடிக்கைகள் என்று அவர் கூறியதன் கருத்து, ஐ. நா. பொதுச் சபையின் கூட்டமாக இருக்கலாம் எனவே நம்பப்படுகிறது. ஐ. நா. பொதுச் சபையின் அவசர கூட்டமொன்றை ரஷ்யா முன்னதாகக் கோரியிருந்தது.

ஐ. நா. பொதுச் சபையைக் கூட்டுவதற்குச் சம்மதம் தெரிவிக்குமாறு, பொதுக் காரியதரிசி யு தாண்ட், சபையின் 122 அங்கத்துவ நாடுகளையும் கேட்டுக் கொண்டுள்ளார். அரபு நாடுகள் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

பொதுச் சபைக் கூட்டமொன்றுக்கு பிரான்ஸ் சம்மதமே எனப் பாரிஸில் உத்தியோக பூர்வமான வட்டாரங்கள் அறிவிக்கின்றன.

மேற்கு ஆசியாவில் நெருக்கடியைத் தீர்க்க ஐ. நா. பொதுச் சபையினால் பயனுள்ள நடவடிக்கை எதுவும் எடுக்க முடியுமா என்பது பற்றிச் சந்தேகம் தெரிவித்துள்ள பிரிட்டன், பொதுச் சபைக் கூட்டத்துக்கு தான் எதிர்ப்பில்லை எனவும் தெரிவித்துள்ளது.

பொதுச் சபைக் கூட்டத்துக்கு ஆதரவு தேடும் முகமாக ஐ. அ. குடியரசு, பல ஆசிய ஆபிரிக்க நாடுகளை அணுகியுள்ளது.

### அகதிகளுக்கு உதவி

மேற்கு ஆசியப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள அகதிகளுக்கு சகல உதவிகளையும் அளிக்குமாறு ஐ. நா. அங்கத்துவ நாடுகளையும், மற்றும் பொது, தனியார் ஸ்தாபனங்களையும் யு தாண்ட் கேட்டுள்ளார். தனது 150,000 அகதிகளுக்கு உதவி தருமாறு ஜோர்டான், ஐ. நா. விடம் கோரியுள்ளது. இந்தக் கோரிக்கையை ஏற்று இந்தியா, கம்பளிகளையும், கூடாரங்களையும் ஜோர்டானுக்கு அனுப்பி வைத்துள்ளது.

## இலங்கை-இந்திய விமான சேவை

### புதிய திருத்தம்

புதுடில்லி, ஜூன் 15

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயான 1948-ம் வருடத்தைய விமானப் போக்குவரத்து ஒப்பந்தத்தைத் திருத்துவதென இரு நாடுகளும் சம்மதித்துள்ளன.

இரண்டு தினங்களாக இரு நாடுகளினதும் விமான அதிகாரிகளிடையே புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் இறுதியிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

இத்திருத்தத்தின் பிரகாரம், புதுடில்லிக்கு இலங்கை நேரடி விமானச் சேவை ஒன்றை நடத்தும். இந்தியா கொழும்புக்கும் அப்பால் தனது விமானச் சேவையை இயக்கும்.

தற்போது இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வாரப் 12 தடவையும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வாரம் 7 தடவையும் விமானச் சேவை நடைபெறுகிறது.

---

## சீன அணு ஆயுத உற்பத்தி

### ஜப்பான் பீதி

டோக்கியோ, ஜூன் 15

இன்னும் 3 வருடங்களில் சீனா தனது அணு ஆயுத உற்பத்தியை பூரணமாக்கிக் கொண்டுவிடுமென ஜப்பான் அறிவித்துள்ளது. இது ஜப்பானுக்கு மட்டுமின்றி, ஏனைய ஆசிய நாடுகளுக்கும் பேராபத்தாகுமென ஜப்பான் அச்சம் தெரிவித்துள்ளது.

---

## பிரிட்டிஷ் அதிகாரி சுட்டுக்கொலை

ஏடன், ஜூன் 15

ஏடனில் ஆயுதம் தாங்கிய பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் அராபிய தேசியவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முன்னதாக, இராணுவ நிலையமொன்றின் முன்னால் அராபிய தேசிய வாதிகள் கைக்குண்டு எறிந்ததையொட்டி அவர்களில் ஒருவர் ஸ்தலத்திலேயே சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

---

## ஜிப்ரால்டர் பிரச்னை

ஜிப்ரால்டர், ஜூன் 15

ஸ்பெயினுடன் சேர்வதா அல்லது பிரிட்டனுடனுள்ள தொடர்பை நீடிப்பதா என்பதை முடிவு செய்ய, எதிர்வரும் செப்டம்பர் [illegible] பொதுஜன வாக்கெடுப்பு நடைபெறும்.

## யுத்தக்கைதிகளை இஸ்ரேல் இம்சிப்பதாக புகார்

சினாயில் ஐ. அ. குடியரசு யுத்தக் கைதிகளை, ஹிட்லர் ஆட்சியின் கீழ் யூதர்களைக் கொடுமைப்படுத்தியதை விட மோசமான முறையில், இஸ்ரேலியர் கொடுமைப்படுத்துவதாகக் கெயிரோவிலிருந்து வரும் அறிக்கைகள் கூறுகின்றன. கைதிகள் நிர்வாணமாக்கப்பட்டு, பல மைல் தூரத்துக்குக் கடும் வெய்யிலில் நடக்கக் கட்டாயப் படுத்தப்படுகிறார்களெனக் கூறப்பட்டுள்ளது.

இவர்களிற் சிலர், இதன் விளைவாக இறந்து விட்டார்களாம்.

தனதுநாட்டு யுத்தக் கைதிகளைத் திருப்பி அனுப்பினால், ஐ அ. குடியரசு யுத்த கைதிகள் 5,500 பேரைத் தான் திருப்பித் தருவதாக இஸ்ரேல் கேட்டுள்ளது. ஏற்கனவே, 6,000 ஐ அ. கு. யுத்த கைதிகளை இஸ்ரேல் ஐ. அ. கு. விடம் ஒப்படைத்துள்ளது.

## சூயஸ் கால்வாய் திறக்கப்பட மாட்டாது

சூயஸ் கால்வாயின் கிழக்குக் கரையில் இஸ்ரேல் துருப்புகள் இருக்கும்வரை, சூயஸ் கால்வாய், கப்பல் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருக்குமென்று ஐ. அ. குடியரசு வெளிநாட்டு மந்திரி திரு. முகம்மது ரியாட் அறிவித்துள்ளார்.

கப்பல் போக்குவரத்துக்கு சூயஸ் கால்வாய் மூடப்படப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்ட சில சிறிய மேற்கத்தைய நாடுகள், கால்வாயைத் திறக்குமாறு அதிபர் நாஸரைக் கோரியதாகவும் இஸ்ரேல் கால்வாயில் ஆக்கிரமித்துள்ள பகுதியிலிருந்து வெளியேறும்வரை கால்வாயைத் திறக்க முடியாதென நாஸர் அறிவித்துள்ளதாகவும் தெரிகிறது.

சூயஸ் கால்வாய் கப்பல் போக்குவரத்தினால், ஐ. அ. குடியரசுக்கு வாரத்துக்கு 20 லட்சம் பவுண் கிடைத்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய ராஷ்டிரபதி தேர்தல் ஆட்சேபமனு

புதுடில்லி, ஜூன் 15

டாக்டர் சாகீர் ஹுசெயின் ஆகவை ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இரு மனுக்கள், ஆகஸ்ட் 14ந்திகதியன்று சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்று நீதிபதி வி. ஏ. வைத்திலிங்கம் திகதி குறிப்பிட்டுள்ளார்.

வேட்பாளரைத் தெரிந்தெடுக்கும் விஷயத்தில் தேர்தல் குழு மெம்பர்களிடம் அளவுக்கு மீறிய செல்வாக்கு பிரயோகிக்கப்பட்டதாக ஒரு மனு கூறியது. டாக்டர் ஹுசெயின உட்பட 16 வேட்பாளர்கள் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ளாததால்போட்டி மனு செல்லாது. எனவும்அது கூறியது.

மனுபைசல் செய்யப்படும் வரை, டாக்டர் ஹுசெயின் ராஷ்டிரபதியாகப் பணிபுரிவதைத்தடுக்க இடைக்கால உத்தரவைக் கோரும் மனு மீது உத்தரவு பிறப்பிப்பது ஜூன் 20ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## மண்டல சார்பற்ற கொள்கையை ஸாம்பியாவும் ஏற்கிறது

### இந்தியாவில் கென்னத் கவுண்டா

புதுடில்லி, ஜூன் 15

இந்தியாவின்மண்டலசார்பற்ற கொள்கையை ஸாம்பியா நாடு பரிபூரணமாக ஆதரிப்பதாக, தற்போது இந்தியாவில் விஜயம்செய்து வரும் ஸாம்பியா அதிபர் டாக்டர்கென்னத்கவுண்டா இங்கு அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

நேற்றிரவு அவருக்கு, இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகீர் ஹுசெயின் அளித்த அரசாங்க விருந்துபசாரத்தில் பேசுகையில், 'தொல்லையுள்ள இவ்வுலகில், மண்டலசார்பற்ற கொள்கை, புதிய நிலைமையொன்றைத் தோற்றுவிக்க உதவுகிறது. இப்புதியநிலைமை, உலகசமாதானத்துக்குப்பாதுகாப்பாக அமைய வழிவகுக்கிறது. இந்தியாவுடன் சேர்ந்து, ஸாம்பியாவும் மண்டலசார்பற்ற கொள்கையை ஏற்றுக் கொள்கிறது' என்று கூறினார்.

டாக்டர் கென்னத் கவுண்டாவை வரவேற்றுப்பேசி, டாக்டர் சாகீர் ஹுசெயின், தேச நலன் காக்கும் பொருளாதார அடிப்படையில் ராஜ்யங்களை அமைக்க இரு நாடுகளும் முயன்று வருவதாகக் குறிப்பிட்டார்.

நீண்ட காலமாகத்தீர்க்கப்படாதிருக்கும் ரொடீஷியப் பிரச்னை, விரைவில் தீர்க்கப்படவேண்டுமென்று இந்தியா விரும்புவதாக டாக்டர் ஹுசெயின் கூறினார்.

### இனவேற்றுமைக்கு எதிர்ப்பு

தென்னாபிரிக்காவில் நிலவும் இனவேற்றுமைக்கொள்கையைக் கண்டித்தராஷ்டிரபதி, தென்னாபிரிக்க இனவேற்றுமைக் கொள்கைக்கு எதிராக ஐ நா. விலும் வெளியேயும் இந்திய ஆதரவு தேடும்முயற்சியில் ஈடுபட்டு வந்துள்ளமையைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவுக்கும் ஸாம்பியாவுக்குமிடையேயான நட்புறவுகள் உறுதியானவை என்றும், அவைபொதுஅடிப்படையிலானவை என்றும் ராஷ்டிரபதிடாக்டர்ஹுசெயின் மேலும் தெரிவித்தார்.

---

## மட்டுவில் கொலை வழக்கு: சுப்ரீம்கோர்ட்டிற்குப் பாரம்

சாவகச்சேரி, வியாழன்

மட்டுவில் கொலை வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் திரு. கே விக்னராஜா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு விசாரணை முடிவில்சுப்ரீம்கோர்ட்டிற்குப் பாரப்படுத்தப்பட்டது.

இவ்வழக்கில் இவ்வருடம் பெப்ரவரி 18-ம் திகதி மட்டுவிலில் மூன்று பிள்ளைகளின் தந்தையான நாகன் சின்னத்தம்பியைக் கொலைசெய்ததாகத் தந்தையும் மைந்தனுமான சுப்பன் தம்பு, தம்பு சின்னப்பு ஆகிய இருவர் மீதும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது. எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானர்.

மாஜிஸ்திரேட் விசாரணை முடிவில் எதிரிகள் இருவரையும் தொடர்ந்து றிமாண்டில் இருக்கும்படி இம்மாதம் 19-ம் திகதி கோர்ட்டிற்கு வரவேண்டுமெனவும் உத்தரவு பிறப்பித்து வழக்கைச் சுப்ரீம் கோர்ட்டிற்குப் பாரப்படுத்தினர்.

---

## விஜயபாரதி வருவார்

வெள்ளவத்தை, வியா.

இறக்குமதி ஏற்றுமதிக்கட்டுப்பாட்டுத் திணைக்கள தமிழ் இலக்கிய மன்றத்தினர் எதிர்வரும் செப்டம்பர் மாதம் பாரதிவிழாவை வெகுசிறப்பாகக் கொழும்பில் நடத்தவிருக்கின்றனர். இவ்விழாவில் விசேஷசொற்பொழிவாளர்களாக பாரதியாரின்பேத்தியாரனதிருமதி விஜயபாரதியும் அவரதுகணவரும் பிரபல எழுத்தாளருமான திரு. அழகிரிசாமியும் பங்கு பற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## சிரமதானம்

பளை, வியா.

பளை மகாவித்தியாலயத்தில் 12-ம், 13-ம் திகதிகளில் வித்தியாலய அதிபர் திரு. சி. இராசநாயகம் தலைமையில் விளையாட்டு மைதானமும் சுற்றுடலில் உள்ள நிலங்களும் பாடசாலை மாணவர்களினால் சிரமதான முறையில் சீர்திருத்தப்பட்டது. பாடசாலை மாணவ, மாணவிகள் உற்சாகமாக சிரமதான வேலையில் ஈடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்

துன்பம் ஒரு மனிதனை கொன்றுவிடுகிறது. அத்துடன் சந்தோஷத்தையும் கெடுத்துவிடுகின்றது, ஆகையால் கடந்த சம்பவங்களையிட்டு கவலைப்படாதீர்கள். நன்மையானவற்றைசெய்து மற்றவைகளை மறந்து விடுங்கள்.

— சுவாமி சிவானந்தா


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹு
ஆனி 2 ஸ்ரீ. (16-6-67)


## உதவி கிடைத்தும என்னபயன்?

இலங்கையில் புற்றுநோய் தடுப்புக்கு உபயோகிப்பதற்காக கனடா அரசாங்கம் மருந்துகளாகவும்வைத்திய உபகரணங்களாகவும் இரண்டு லட்சம் ரூபாய்பெறுமதியான சாதனங்களை வழங்கியதாகவும் இவற்றை இலங்கை பயன் படுத்தாமல் வைத்திருப்பதாகவும் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுகாதாரவார விழாவில் டாக்டர் கே.கனகரத்தினம் பேசுகையில் தெரிவித்திருந்தார். அவர் கூறியது உண்மையானல் இதையிட்டு இலங்கை அரசாங்கம் மட்டுமல்லாது இலங்கைக்கு உதவியளித்தகனடாவும்இலங்கைக்குஉதவி அளிக்கும் இதர நாடுகளும் நிச்சயம் கவலையடைய வேண்டும்.

புற்றுநோயைத் தடுப்பதற்கான வைத்திய வசதிகளை யாழ்ப்பாணத்துக்கும் அளிக்கவேண்டுமென்றும் அதற்கான மருந்துவகைகளையும் வைத்திய சாதனங்களையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப வேண்டுமென்றும் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுக்கப்பட்டும் சுகாதாரப்பகுதியினர் அதற்குச் செவி மடுக்கவில்லை. ஆனல் புற்றுநோய் தடுப்புக்குஎன கனடா அரசாங்கம் அளித்துள்ள உதவியையும் சுகாதாரப் பகுதியினர் இன்னும் சரியாகப் பயன்படுத்தவில்லை. தானும் உண்ணுமல்மற்றவர்க்கும் பயன்படுத்தாமல் தடுக்கும் 'வைக்கோல்பட்டடை நாய்' போன்று நமது சுகாதார இலாகாவும் அமைச்சும் நடந்துகொள்வது வேடிக்கையாகவும் கவலைஅளிப்பதாகவும் இருக்கிறது. புற்றுநோயைத் தடுப்பதற்கென கனடா அரசாங்கம் அளித்துள்ள உதவிகளை சுகாதார அமைச்சு சரியாகப் பயன்படுத்த வேண்டும். பயன்படுத்தத் தெரியாவிட்டால், பயன்படுத்துவதற்கு முன்வருபவர்களின் யோசனையையாவது கேட்கவேண்டும்.

புற்றுநோயைத் தடுப்பதற்கு கனடா அளித்துள்ள உதவி மட்டுமல்ல கைத்தொழில், விவசாயம் மற்றும் பல துறைகளிலும் அபிவிருத்தி ஏற்படுவதற்கு வெளிநாடுகள் அளித்துள்ள பல உதவிகளும் இங்கு சரியாகப் பயன்படுத்தப்படுவதில்லையென்பது பொதுவான குற்றச்சாட்டு இந்நிலையில் வெளிநாடுகளிடம்மேலும் மேலும் உதவி கேட்பதாலோ, அவை உதவியளிப்பதாலோ என்ன பயன்?

எது எதற்கெல்லாமோ கமிஷன் நியமித்து விசாரணை நடத்தும் நமது அரசாங்கம் இதுவரை நாம் வெளிநாடுகளிலிருந்து பெற்ற உதவிகள் பற்றியும் அவற்றை எந்த அளவுக்கு உபயோகித்து நாம் பயன்படுத்தியிருக்கிறேம் பயன்படுத்தத் தவறியதற்கு என்ன காரணம், எப்படி அவற்றைப் பயன்படுத்தலாம் என்பவை பற்றியெல்லாம் ஆராய்வதற்கு ஒரு கமிஷன் நியமித்தால் என்ன?

# இலங்கை-இந்திய அமுல்மசோதா

### பதில் எதிர்க்கட்சி தலைவர் விடுத்த பத்திரிகை அறிக்கை

கொழும்பு, வியாழன்

பதில் எதிர்க்கட்சித் தலைவர் திரு மைத்திரிபாலசேன நாயகா பின்வரும் அறிக்கையை நேற்றுப்பத்திரிகைகளுக்கு விடுத்துள்ளார்.

'இலங்கை-இந்திய அமுல் மசோதாபற்றி இம்மாதம் 10ந்திகதி பிரதமர் டட்லி சேனநாயகா, பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை, அண்மையில் ஜனப்பிரதிநிதிகள்சபையில் நிறைவேற்றப்பட் சட்டம் பற்றிய சந்தேகங்களையும், அச்சங்களையும், நீக்குவதாக உரிமை பாராட்டுகிறது.

'ஆனல், உண்மையில், அது பின்வருவனவற்றையே உறுதிப்படுத்துகிறது.

'திரு. சேனநாயகாவின் சொந்தக்கூற்றின்படி, சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் ஒரு பிரதான அம்சத்தில், அந்த மசோதா வித்தியாசப்படுகிறது'.

இலங்கைப் பிரஜாவுரிமை அளிப்பதற்கு, இந்தியர்களை முதலில் திருப்பி அனுப்ப வேண்டுமென்ற நிபந்தனை ஒப்பந்தத்தில் இருந்த போதும், இன்று இந்த அடிப்படை நோக்கத்தை மசோதா உதாசீனம் செய்துள்ளது.

இவ்வாறு குறிப்பிட்டுள்ள திரு.மைத்திரிபால சேனநாயகாவின்மசோதா, 15வருட கால சட்டத்தில் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் அமுல்படுத்தப்படவேண்டும்என்ற முக்கிய அம்சத்தை உள்ளடக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் காரணங்களுக்காக ஜனப்பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்ட மசோதா இந்தியர்களைத் திருப்பி அனுப்புவது என்ற சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரதான நோக்கத்திலிருந்து, இந்திய தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிவிரைவாக இலங்கைப்பிரஜாவுரிமையை அளிப்பதென்ற நோக்கத்துக்கு மாறியுள்ளதாகவும் திருவாளர்கள் டட்லி-தொண்டமான்இருவரதும் அரசியல் ஒப்பந்தமே தற்போது செயற்படவிருப்பதாகவும் திரு மைத்திரிபால சேனநாயகா தமது அறிக்கையில் மேலும் கூறியுள்ளார்.

## பஸ்களிருந்தும் அதிகாரிகள் இல்லாததால்ஏற்பட்டகஷ்டம்

கிளிநொச்சி, வியா.

இங்குள்ள பஸ் நிலையத்தில் பொறுப்பான அதிகாரிகளில்லாமையால் சென்ற செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் இராமநாதபுரம் செல்வதற்கு பஸ்ஸில் ஏறிடிக்கற் பெற்றுக்கொண்ட 53 பிரயாணிகள் தங்கள் இடத்திற்குச் செல்லமுடியாமல் பெருத்த அவதிக்குள்ளாக நேரிட்டது. இவர்கள் ஏறியிருந்த பஸ் பழுதாகிவிட்டதென்று கூறி டிக்கற்பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது, ஆனல் அதே வேளையில், இங்குள்ள பஸ் நிலையத்தில் வேறு நல்ல நிலைமையிலுள்ள இரண்டு பஸ்வண்டிகள் இருந்தும் அவற்வைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய உத்தரவிட அதிகாரிகள் எவரும் இல்லை. இரவு முழுவதும் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாய் தங்குவதற்கு இடமின்றி அவலப்பட்ட இப்பிரயாணிகளில் சிலர் இச்சம்பவம் பற்றி கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் க. பொ. இரத்தினத்திடம் சென்று முறையிட்டுள்ளனர். அவர் இது பற்றி விசாரணை நடத்துமாறு இ போ. ச மேலதிகாரிகளைக்கேட்டுள்ளார்.

## குடிதண்ணீர் வசதி

ஊர்காவற்றுறை, வியா.

புங்குடுதீவில் நிலவும் குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. விநாயகலிங்கம் புங்குடுதீவு கிழக்கு உணவு உற்பத்திக்குழுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. தம்பு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கமக்காரர்களுக்குத் தேவையான விதைகளைப் பெற்றுக்கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. சீரகம், கடுகு, விதைகளையும் வரவழைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பெரிய கிராய் குளத்தைச் சீர்திருத்தம் செய்வதற்கு சிரமதானத்தை மேற்கொள்ளவேண்டுமெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

புங்குடுதீவு கிழக்கு கிராமசேவகர் உட்பட வேறு சிலரும் உரைநிகழ்த்தினர்.

## 'பண்ணிசை வளரவேண்டும்'

### சுவாமிகள் கோரிக்கை

உடுவில், வியாழன்

'முற்காலத்தில் ஆள்வார்களாலும், அடியார்களாலும் இசைக்கப்பட்டு வளர்ச்சியுற்ற பண்ணிசை இன்று சிதைந்து அழிந்துவிடும் நிலையில் இருக்கின்றது. சங்கீத வித்துவான்கள் பண்இசைகள் எப்படி வகுக்கப்பட வேண்டும் என்பதை ஆராய்ச்சி செய்து ஒருமுகப்படுத்திக்கொள்ள வேண்டும். கோவில்களில் எல்லாம் பண் ஒலிக்கவேண்டும்.''

உடுவில் சிவஞானப்பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் நேற்று ஆரம்பமாகியபோது, உற்சவ நிகழ்ச்சியில் கலந்துகொண்டு 'நம்பியும் தும்பியும்' என்னும் விடையம் பற்றிச் சொற்பொழிவாற்றிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமியவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் மேலும் கூறியதாவது:-

நம்மை அடக்குவது ஐந்து. [illegible] ல் இறைவன் எம்மை அடக்கிக்கொள்வான். நம்மையடக்கும் ஐம்புலன்களையும் நாம் அடக்கி ஒருமுகப் படுத்தக்கூடிய சக்தி நிறைந்த இடம் ஆலயம் ஒன்றுதான். அங்கு காண்பவை, கேட்பவை எல்லாம் ஒன்ருக இருக்கவேண்டும். நாட்டியங்கள், சினிமாப்பாடல்கள் போன்ற கலைநிகழ்ச்சிகள் வளர்ச்சியுறத்தான் வேண்டும். ஆனல் அவை வளர்க்கப்படும்இடம் ஆலயமாக இருக்கக்கூடாது. வெவ்வேறு இடங்களில் அவைகள் வளர்க்கப்படும் நேரத்தில் ஆலயங்களில் நல்ல தேவாரங்கள் திருவாசகங்கள் எல்லாம் பண்ணுடன் இசைக்கப்பட்டு, பண்ணிசை வளர வேண்டும்.



## இ. போ. ச. கவனிக்குமா?

இணுவில் ஆஸ்பத்திரி தொடக்கம் கோண்டாவில் வரை காத்திருக்கும் பஸ் பிரயாணிகள் படும் அல்லல்கள் ஒன்றிரண்டல்ல. அவர்கள் காலை 7 மணி தொடக்கம் காத்திருந்தாலும் 9 மணிவரை பஸ்ஸில் இடம் பெறுவது என்பது 'முயற்கொம்பாகவே' இருக்கின்றது.

கீரிமலை—யாழ்ப்பாணம் [சுன்னுகம் ஊடாக] பஸ் சேவை மற்றைய 'டிப்போக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கின்றதென்றே கூறவேண்டும். இணுவில் பகுதி மக்கள் தானு தொடர்ந்தும் இந்த அவல நிலைக்கு ஆளாகவேண்டியிருக்கின்றது என்பதை நினைந்து இங்கு வாழ் ஒவ்வொருவருமே மனம் புழுங்கிக்கொண்டிருக்கின்ருர்கள். ஏன் இப்பகுதிப் பிரயாணிகளுக்கு மட்டும் பாரபட்சம் காட்டப்படுகிறது?

கீரிமலையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ் வண்டிகளில் யாழ்ப்பாணம்வரை செல்லும் பிரயாணிகள் ஏற்கனவே இடத்தைப் பிடித்து விடுவதால், அவை இணுவிலை வந்தடையும் போது, இப்பகுதிப் பிரயாணிகள் ஏறிக்கொள்வதற்குப்போதிய இடம் கிடைப்பதில்லை ஓரளவுக்கு இடம் இருப்பினும் கொண்டக்டர்மார் பிரயாணிகளை அதிகம் ஏற்றுவதுமில்லை.

தாவடியிலிருந்து யாழ்ப்பாணம் வரை பிரயாணம் செய்யும் மக்கள் ஓரளவுக்கு வசதியாகச் செல்கின்ருர்கள் என்று கூறலாம். ஏனெனில் அவர்கள் தாவடி—மானிப்பாய், கீரிமலை—யாழ்ப்பாணம் ஆகிய இரு மார்க்கங்களாலும் வரும் பஸ் வண்டிகளைப் பிடித்துக் கொள்ளுகின்ருர்கள்.

சுன்னுகத்திலிருந்துயாழ்ப்பாணம் செல்பவர்கள்கூட சுன்னுகம்—யாழ்ப்பாணம் குறுகிய தூர பஸ் சேவை மூலம் செல்லுகின்ருர்கள்.

இத்தகைய நிலையை மேலும் நீடிக்கவிடாது தவிர்க்க வேண்டுமாயின் இணுவில் ஆஸ்பத்திரி தொடக்கம் யாழ்ப்பாணம் வரையான ஒரு குறுகிய தூர பஸ்சேவையை உடனடியாக ஆரம்பித்துவைக்க வேண்டும். அப்போதுதான் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு வைத்திய உதவிபெறச் செல்பவர்கள், நீதிமன்றத்துக்கு குறித்த நேரத்துக்குப் பிரசன்னமாக வேண்டியவர்கள். அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் வசதியாகவும் காலதாமதமின்றியும், இணுவிலில் இருந்து யாழ்ப்பாணம் பிரயாணம் செய்ய வசதிகிட்டும்.

உடுவில் கிராமசபை இத்தகைய ஒரு சேவையினை ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதாகவும், சம்பந்தப்பட்ட இ. போ. ச. தலைவருடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தியதாகவும் அவரும் இதற்கு இணங்கியுள்ளார் என்றும் பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம். இது நிகழ்ந்தது பலமாதங்களுக்கு முன்னர். வார்த்தைகள் அளவில் இப்பிரச்னைக்கு முடிவு கண்ட கிராமசபையும், இ. போ. ச. வும் ஏன் செயலளவில் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று வினயத்துடன் வினவுகின்ருேம்.

கா. சிவபாலசிங்கம்,
இணுவில்.

ஃ ஃ ஃ

## பிரயாணிகள் தவிக்கின்றனர்

சில தினங்களுக்குமுன் பிற்பகல் 3-30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கேரதீவுக்குச்சென்ற பஸ் வண்டி கச்சேரியடியில் பழுதடைந்து நின்றுவிட்டது. 5-30மணியளவில் பஸ்திருத்தப்பட்டதும் மேற்கொண்டு பஸ் செல்லாமல், திரும்பவும் யாழ்ப்பாணம்நோக்கிச் செல்லத்தொடங்கியது.இதனல் பிரயாணிகள்மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பிரயாணிகள் பஸ்கண்டக்டரிடம் இதுபற்றி வினவியபோது தங்கள் கடமை நேரம் முடிந்துவிட்டதாகவும், மேற்கொண்டு செல்லத் தாம் தயாராக இல்லையெனவும் கூறிவிட்டார்கள். இதனல்ஏமாற்றம் அடைந்த பிரயாணிகள், யாழ்ப்பாணத்தை அடைந்ததும்வெகு நேரம் சென்றபின்பு தான் தனங்கிழப்பு-கச்சாய் ஊடாகக் கொடிகாமம் செல்லும் பஸ்ஸில் சென்றனர். இதனல் கேரதீவு பிரயாணிகள் கேரதீவு செல்ல முடியாது போய்விட்டது. மக்களுக்காக இ.போ.ச. பஸ்சேவை நடக்கிறதா? இல்லை வேறு யாருக்காக?

சு. குணபாலசிங்கம்
மறவன்புலோ.

## இசைவிழாக்களும் திருமுறைகளும்

''பண்ணிசைக்கு இடமளியுங்கள்'' என்ற தலைப்புடன் ஒரு கடிதம் சமீபத்தில் ''ஈழநாடு'' பத்திரிகையில் வெளியாகியிருந்தது. இசைவிழாக்களில் இசைவிருந்தளிக்கும் வித்துவான்கள் திருமுறைகளைப் பாடுவதில் கவனம் செலுத்துவதில்லை என்ற குறை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் இசைவிழாக்களை நடத்துபவர்கள் திருமுறை ஓதுபவர்களுக்கு இசைவிழாக்களில் பாடும் வாய்ப்பளிப்பதில்லை எனவும் குறை சொல்லப்பட்டுள்ளது. இவை இரண்டும் பெரிய விஷயங்கள். இவைகளைப்பற்றி விரிவாக ஆராயப் பத்திரிகை இடந்தராதாதலின் எனது கருத்துக்களைச் சுருக்கித்தந்துள்ளேன்.

தற்காலம் நடைபெறும் இசையரங்குகள் பெரும்பாலும் களியாட்டங்களாகவும் கண்காட்சிகளாகவும் விளம்பர நிகழ்ச்சிகளாகவும் அமைந்துவிடுகின்றன. சிலருக்கு இவைகள்பொழுதுபோக்காயமைகின்றன. இன்னும் சிலருக்குப் பிழைக்கும் வழியாகவுள்ளன. விரிக்கிற் பெருகும். இத்தகைய விழாக்களில் செவிக்கின்பம் கிடைத்தாலும் உள்ளத்துக்கின்பம் கிடைக்குமா என்பது சந்தேகம். நிற்க,

''பண்ணிசை பாடக்கூடிய வித்துவான்கள் எங்கள் மத்தியில் எத்தனையோபேர் இருக்கிருர்கள்'' என இக்

[8-ம் பக்கம் பார்க்க]



## நாட்

சென்ற வ... யான பத்திரி... யல் தலை... இருவர்—ஒரு... டவர், மற்ற... வர்— தங்கள்... அனுபவங்களை... யிட்டுள்ள ... படித்தேன். ... ஆச்சரியமாக... யாகவும் இரு...

முன்னுள் ... எம். பி.யும்... உணவு, வி... அமைச்சருமா... வி. குமாரசுவ... மூன்று வரு... இலங்கை த... தேவையைப் ... கொள்வதற்கு ... மார்க்கம் இரு... ஓர் ஆங்கில... யில் தம் கைப்... டுரை வரைந்தி...

இக்கட்டுரை... தமது வயலி... தைக் காட்டும்... வெளியாகி... அதைப் பார்த்... தரலிங்கத்தா... லுள்ள தமது ... டைக் கால்சட்... தலையில் தெ... நின்று கண்கா... வது நினைவுக்கு...

திரு. குமார... கமத்தில் விளை... ஓர் அற்புத ... கூறுகிறார். ... விளையும் பெ... நெற்பயிருக்கு... ஸில் உண்டா... குள்ள இனத்... றிய ஒரு கலப்... அவர் தெரிவிக்... பெயர் ஐ ஆர்...

இந்த இனம்... தீவுகளிலுள்ள ... அரிசி ஆராய்... தில் உற்பத்தி... தாம். இதில் ... தன்மைகள் அ... வாம்.

இந்த நெல்... கால் கொத்து ... சுவாமிக்கு ஒ... மூலம் கிடைத்... அதை நா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ட்டிலும் நகரிலும்

...ன்ற வாரம் வெளி ...பத்திரிகைகளில் அரசி ... தலைவர்களாயிருந்த ...ர்—ஒருவர் ஈழநாட் ... மற்றவர் தமிழகத்த ...தங்கள் கமத்தொழில் ...வங்களைப்பற்றி வெளி ...ள்ள கருத்துக்களைப் ...தேன். படிக்க மிகவும் ...யமாகவும் மகிழ்ச்சி ...ம் இருந்தது.

...னுள் சாவகச்சேரி ... பி.யும் ஒரு காலம் ..., விவசாய பதில் ...ச்சருமாயிருந்த திரு. ...மாரசுவாமி, இன்னும் ... வருடங்களுக்குள் ...கை தனது அரிசித் ...யைப் பூர்த்திசெய்து ...வதற்கு ஒரு சிறந்த ...கம் இருக்கிறதென்று ...ஆங்கிலப் பத்திரிகை ...ம் ...கைப்பட ஒரு கட் ...வரைந்திருக்கிறார்.

...கட்டுரையுடன் அவர் ... வயலுக்குள் நிற்ப ...காட்டும் ஒரு படமும் ...ியாகியிருந்தது. ...ப் பார்த்தபோது சுந் ...கத்தார் வவனியாவி ... தமது கமத்தில் கட் ... கால்சட்டையுடனும் ...ல் தொப்பியுடனும் ... கண்காணிப்பு செய் ...னைவுக்கு வந்தது.

... குமாரசுவாமி தமது ...ல் விளைவிக்கும் நெல் ...அற்புத நெல் என்று ...ர். அது ...னத்தில் ... பெரிய ராட்சத ...யிருக்கும் பிலிப்பைன் ... உண்டாகும் சின்ன ... இனத்துக்கும் தோன் ...ரு கலப்புசாதி என்று ...தெரிவிக்கிறார். அதன் ... ஐ ஆர். 8.

...5 இனம் பிலிப்பைன் ...ிலுள்ள சர்வதேச ... ஆராய்ச்சிக் கழகத் ...உற்பத்தியாக்கப்பட்ட ... இதில் பல விசேஷ ...மகள் அமைந்துள்ளன

...5 நெல்லில் சுமார் ...காத்து திரு. குமார ...க்கு ஒரு நண்பர் ... கிடைத்ததும் அவர் ... நாற்றுப்போட்டு

பின்னர் வயலில் நாற்றுநட்டார். ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நாற்று நடப்பட்ட பயிர் மே மாதம் முதலாம் திகதி அறுவடை செய்யப்பட்டபோது அந்த கால்கொத்து ஐ. ஆர். 8 நெல் 65 கொத்து நெல்லைக் கொடுத்ததாம். அதாவது ஏக்கருக்கு 200 புசல்!

ஐ. ஆர். 8 இன நெற்பயிர் அதிகம் உயரத்துக்கு வளராது. குட்டையாகவே இருக்கும். உயரமாக வளரும் பயிர் கதிர் பாரத்தால் தலைசாய்ந்து நிலத்தில் விழுந்து அறுவடையின்போது சில்லங்கெட்டு சிதறிப் போகும். அல்லாமலும் இப்பயிர் வெய்யிலை விரும்புவது. இலங்கையைப் போன்ற உஷ்ணவலைய நாடுகளில் இது நன்றாக வளரும்.

அற்புத நெல் வகையை தமிழகத்தில் கண்டிருப்பவர் தமிழக சட்டசபைக் காங்கிரஸ் (எதிர்க்கட்சி) தலைவர் திரு. கருத்திருமன், எம். எல். ஏ. இவர் 1966ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது அமெரிக்கஅரசாங்கத்தின் அழைப்பின் பேரில் நெல் விளையும் நாடுகள் எல்லாவற்றிலும் சுற்றுப்பிரயாணம் செய்து அதே பிலிப்பைன் தீவு சர்வதேச நெல் ஆராய்ச்சிக் கழகத்தில் ஒரு வாரம் தங்கியிருந்து ஒரு புதுரக நெல்லை தமிழகத்திற்கு கொண்டு வந்தார்.

இந்த புதிய நெல் ரகத்தின் சிறப்பு என்னவென்றால் ஏராளமான எருவகைகளைப் போட்டாலும் கூட 2 1/2 அல்லது 3 அடிக்கு மேல் வளருவதில்லையாம். கதிர் விளைந்து முற்றியபின்பும் தாள் சாயாமல் நிமிர்ந்து நிற்கும். ஒவ்வொரு பயிரிலும் 20, 30 கணுக்கள் வெடித்து ஒவ்வொன்றிலும் நெல்மணிகள் காய்த்துக் குலுங்குமாம்.

விதைப்பிலிருந்து சாகுபடி வரை மொத்தம் 135 நாட்கள்தான் ஆகின்றன. அதாவது 4 1/2 மாதங்கள்.

சாவகச்சேரிகுமாரசுவாமியார் புகழும் ஐ. ஆர். 8 நெல்இனமும் கருத்திருமனார் வியக்கும் அற்புதநெல் இனமும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டுமென்று சமுசயிக்க வேண்டியிருக்கிறது.

தென்னிந்தியாவுக்கும் இலங்கையின் வடக்குகிழக்கு பகுதிகளுக்கும் சீதோஷ்ண நிலை ஒரேமாதிரி இருப்பதால், இருநாடுகளிலுமுள்ள மதிப்புக்குரிய இவ்விரு தலைவர்களும் வியந்து புகழும் இந்த சிறந்தநெல்இனத்தை எமது கமத்தொழில் பகுதி இலங்கை முழுவதிலும் புகுத்துவதற்கு ஏதாவது இடையூறாக இருக்கிறதா?

திரு. குமாரசுவாமி போன்ற தனிப்பட்டவர்கள் தங்கள் சொந்த கமங்களில் கண்டிருக்கும் இந்த வெற்றியை நெற்பயிர்செய்வோர் அனைவரும் கண்டால் நாம் நமது அரிசித்தேவைக்கு பிற நாடுகளிடம் பிச்சை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாதல்லவா?

\- வழிப்போக்கன்

# கனடா அளித்த உதவியை இலங்கை பயன்படுத்தவில்லை

## யாழ். சுகாதார விழாவில் டாக்டர் கனகரத்தினம் தகவல்

யாழ்ப்பாணம், வெள்ளி

''புற்று நோய் சம்பந்தமாக இலங்கைக்கு கனடா தேசம் வைத்திய உதவிகளை அளித்துள்ளது. . . அவர்கள் றேடியம், போவல்ற் போன்ற வைத்திய மருந்துவகைகளையும், வைத்தியக் கருவிகளையும் அளித்துள்ளனர். இவற்றை அரசாங்கம் கொழும்பில் தான் வைத்திருக்கிறது. இந்த வைத்திய முறைகள் வடபகுதியிலும் கையாளப்படவேண்டும் என நாம் அரசாங்கத்தை கேட்டபோது அரசாங்கம் மௌனம் சாதித்தது. இரண்டு லட்சம் பெறுமதியான புற்று நோய் மருந்துகளையும் கருவிகளையும் அரசாங்கம் உபயோகப்படுத்தாமல் பூட்டிவைத்திருக்கிறது.''

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற சுகாதார விழாவில் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் புற்றுநோய் தடுப்புச் சங்கத்தின் தலைவரான டாக்டர் கே. கனகரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறிதாவது:

புற்று நோய் போன்ற கொடியநோய் வேறொன்றுமில்லை. இந்நோய்க்கு சிகிச்சையளிக்க தாமதம் ஏற்பட்டால், இதனால் நோயாளி மிகவும் பாதிக்கப்படுவார். எனவே இந்நோய்க்குரிய அடையாளங்கள் உடலில் கண்டதும் தாமதம் செய்யாது உடனே வைத்திய அதிகாரியைச் சந்தித்து சிகிச்சை பெற வேண்டும். புற்று நோயானது ஆண்களுக்கு தொண்டை, அலகு, உதடு ஆகிய இடங்களிலும் பெண்களுக்கு கெற்பப்பை இரைப்பை ஆகிய இடங்களிலும் அதிகமாக வரக்கூடிய அறிகுறிகள் தென்படும்.

புற்று நோய் ஒரு தொற்று வியாதியல்ல, பரம்பரை வியாதியும்அல்ல. இதுவரை புற்றுநோய் எப்படித் தோன்றுகின்றது என்பது பற்றி எவரும் சரிவரக் கண்டுபிடிக்கவில்லை. எனினும், சுண்ணாம்பு, புகையிலை, வெற்றிலை பாவிப்பவருக்கும், புகை பிடிப்பவருக்கும், ஒழுங்கில்லாத பற்கள் உள்ளவர்களுக்கும் புற்றுநோய் அதிகமாகத் தோன்றுகின்றது என்று கூறுகிறார்கள். அல்லாமலும் இது சம்பந்தப்படாதவர்களுக்கும் இந்நோய் இருப்பதால் எப்படி இந்நோய் பீடித்துக் கொள்கிறது என்பதை அவதானிக்க முடியவில்லை முடிவாக இந்நோய் தோன்றியதும் உடனே வைத்திய சிகிச்சை செய்து கொள்வதன் மூலமே இதைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

தோல் வைத்திய நிபுணர் டாக்டர் சிவசோதி பேசுகையில் குறிப்பிட்டதாவது:

மனநோய் வைத்திய நிபுணர் அறிக்கையின்படி 1500 மன நோயாளர்கள் இங்கு இருக்கிறார்களாம். மன நோய்க்கும், தற்கொலைக்கும் காரணம், மனக்கட்டுப்பாடின்மையேயாகும். இளைஞர்களிடையே மனநோய் ஏற்படுவதற்கு பெற்றோர்களே காரணம். ஆதலால் பெற்றோர்களே, பிள்ளைகளின் உடல்நிலை விஷயத்தில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும். இலங்கை வைத்திய அறிக்கையின்படி ஓர் ஆண் 60 வயது வரைக்கும் பெண் 66 வரைக்கும் ஆரோக்கியமாகச் சீவிக்கிறார்களென்றும், மேல் நாடுகளில் 70 வயது வரையில் மக்கள் ஆரோக்கியமாக சீவிக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. இதன்படி, இலங்கை சுகாதாரத் துறையில் முன் இருந்ததைவிட இப்பொழுது பெரிதும் முன்னேறிவிட்டதை அவதானிக்கலாம்.''

மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். இராசசூரியர் பேசுகையில், ''சுகாதார விளக்கங்களைப் புத்தகப்படிப்புடன் நிறுத்திவிடக் கூடாது. அவற்றை செயல் முறையிலும் கையாளவேண்டும். தொற்று நோய்களை ஒழிப்பதற்கு பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும்'' என்று சொன்னார்.

திரு. ஹட்சன் செல்வராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## சிரமதானம்

அச்சுவேலி, வியாழன்

''மாணவர்கள் சிரமதானப்பணியைக் களங்கமற்ற மனத்துடன் செய்ய முன்வரவேண்டும். இப்பணியில் மிகுந்த ஊக்கம் காட்டுவோமேயானால் பரோபகார சிந்தை நம்மனதில் குடிகொள்ள ஆரம்பித்துவிடும். இதனால் நமது சமுதாயம் முன்னேறுவதோடமையாது சிக்கன வாழ்க்கையையும் பழகியவர்களாகி விடுகின்றோம்.

சிரமதானமூலம் நாம்ஒரு வேலையை ஆரம்பித்தால் கூலியாட்களின் தட்டுப்பாடின்றி குறைந்த செலவில் குறுகிய நேரத்தில் முடித்தவர்களாகி விடுகின்றோம்.''

இவ்வாறு அச்சுவேலிவடக்கு றோ.க.த. பாடசாலை தலைமைஆசிரியர்திரு சூ. கிறிசோஸ்ரம் சிரமதானப் பணியை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். இப்பணிக்கு ஆசிரியர்கள் மனமுவந்து 50ரூபா செலவிட்டனர்.





இதோ வந்து விட்டது
விரி-மூடிப் பெட்டி
20 கொண்டது
போர் ஏசஸ்
பில்டர் முனைச் சிகரெட்டுகள்
நிறைந்த சுவை * சிறந்த பில்டர் முனை * குறைந்த விலை
சிலோன் [illegible] கம்பனி லிமிடெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ,'எல்லாச் சமயமும் ஒன்றேஎன்பதை உணர்த்தியவர் பரமஹம்சர்''

யாழ்ப்பாணம், வெள்ளி

''உலகத்தில் தோன்றியுள்ள சமயங்கள் யாவும் தமது வேதங்களில் கடவுளை அடைவதற்கு பல வழிகளைக் காட்டினலும் அவைகளின் மூலப்பொருள் எல்லாம் ஒன்றே. எல்லாச் சமயங்களும் இறைவனடி சேரும் வழியையே போதிக்கின்றன. இந்த உண்மையைத் தமது வாழ்க்கையிலேயே அனுஷ்டித்துக் காட்டியவர் இராமகிருஷ்ணராகும்.''

யாழ்ப்பாணம் ஸ்ரீ இராமகிருஷ்ண சபையினர் ஆதரவில் நேற்றுமுன் தினம் வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் மாலை நடைபெற்ற ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜயந்திவிழா வுக்கு தலைமைவகித்துப் பேசிய இலங்கை இராமகிருஷ்ண சங்கத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தா மேற்கண்டவாறு கூறினர்.

''இராமகிருஷ்ணர் கல்வியறிவு இல்லாதவர். அவர் தனது சொந்த ஆத்மீக ஆற்றலினலேயே மெய்ப்பொருளை உணர்ந்தவர். உலக மக்கள் அனைவரையும் வேறுபாடின்றி ஒரே கண்கொண்டு அரிய பல உண்மைகளையும், உபதேசங்களையும் கூறினர். அந்த உபதேசங்களை உலக மக்கள் இடையே பரப்பியவர் விவேகானந்தர் ஆவார். இராமகிருஷ்ணரின் போதனைகள் இந்தியாவில் மட்டுமல்ல உலக மக்களையே இன்று கவர்ந்திருக்கிறது. சமய உணர்ச்சியை ஊட்டும் அவரது உபதேசங்கள் எல்லாச் சமயத்தவருக்கும் ஒரு பொதுவழிகாட்டியாகவே அமைந்துள்ளது'' என்றும் சுவாமி பிரேமாத்மானந்தா மேலும் கூறினர்.

முதலியார் செ. சின்னத்தம்பி பேசும்போது,

''உண்மையில் இறைவனை அடையவிரும்பும் பக்தர்களுக்குள் இனமதபேதம் இருக்கக்கூடாது. பேதம் உள்ளவரின் உள்ளத்தில் ஆணவமே தலைவிரித்தாடும். எமது உடலின் 8 அங்கங்களும் நிலத்தில் பட நாம் அஷ்டாங்க நமஸ்காரம் இறைவனுக்குச் செலுத்துகின்றோம். அதன்பொருள் என்னவெனில் நான் என்ற ஆணவத்தை அடக்கியே வணங்குகிறேன் என்பதை எடுத்துக்காட்டுவதேயாகும் எனவே எமது தூய்மையான மனதை மாசு கற்பிக்கும் சாதிவேறுபாட்டை நாம் அழித்துவிடல் வேண்டும்.'' என்று கூறினர்.

அடுத்து டாக்டர் ஈ. டபிள்யூ. அதிகாரம் பேசும்போது சிங்கள — தமிழர் ஒற்றுமையை வலியுறுத்தினர். திரு. ச. அம்பிகைபாகன் நன்றிகூறினர்.

## அமைச்சருக்கு எம். பி. புகார்

கிளிநொச்சி, வியா.

''யாழ்ப்பாணம் கிழக்கு இ. போ. ச. டிப்போவில் உள்ள பஸ் பழுது பார்க்கும் பகுதி ஒழுங்காகசெயற்படுவதில்லை. எனவே உடனடியாக இதைத் திருத்தியமைக்கவேண்டும்'' என்று கோரி கிளிநொச்சித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தேசிய அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசாவுக்கு ஒரு தந்தி அனுப்பியிருக்கிறர். அத்தந்தியில் கிளிநொச்சி பஸ் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் கிழக்கு பஸ் டிப்போவுக்கு பழுது பார்ப்பதற்கு அனுப்பப்பட்ட ஒரு பஸ் பழுது பார்க்காமலே கிளிநொச்சி பஸ்நிலையத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறர்.

## ரூ. 1000 பிணை

சாவகச்சேரி, வியாழன்

பளை-வண்ணன் கேணியைச் சேர்ந்த சிதம்பரி கைம்பெண் சின்னம்மா என அழைக்கப்படும் சுமார் ஐம்பது வயதுக்கைம்பெண் ஒருவர் பெற்ற பிள்ளையைக் கொன்று புதைத்தார் என்ற சந்தேகத்தின்மீது பளைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. என். ஜினசேனவினல் கைதுசெய்யப்பட்டு மாஜிஸ்திரேட்டின் உத்தரவின்படி றிமாண்டில் வைக்கப்பட்டு மீண்டும் செவ்வாய்க்கிழமை ஆஜர் செய்யப்பட்டார்.

சாவச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா அப்பெண்ணை ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

## புதிய நிர்வாகிகள்


சுழிபுரம், வியாழன்

பொன்னலை வரதராசப் பெருமாள் வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் சங்க புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்- திரு. க. சரவணமுத்து, காரியதரிசி- ந. கந்தசாமி, நிர்வாகசபை உறுப்பினர்- அ. கோவிந்தபிள்ளை, மு. வெற்றிவேலு, செல்வி சி. செல்வரஞ்சிதம், சி. வாமதேவன், வே. கனகசபை, வி. செல்லப்பா, எம். மகேந்திரன்.

## இருளில் முல்லைத்தீவு

முல்லைத்தீவு, வியா.

முல்லைத்தீவுப் பட்டின சபையின் மின்சாரநிலையத்தில் உள்ள இரண்டு இயந்திரங்களில் ஒன்று பழுதடைந்துள்ளதால் சென்றசிலநாட்களாக இருள்சூழ்ந்தநிலையில் இரவில் முல்லைத்தீவு காட்சியளிக்கின்றது.



## புதிய சமாதான நீதவான்

துன்னலையைச் சேர்ந்த திரு. வல்லிபுரம் கந்தையா பருத்தித்துறை நீதிபரிபாலன மாவட்டத்தில் சமாதான நீதவானக நியமிக்கப்பட்டு பருத்தித்துறை நீதிபதி திரு. கே. விக்கினராசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஹாட்லி கல்லூரியில் கல்வி பயின்ற திரு. கந்தையா 40 வருடங்களாக சுங்கப்பகுதியில் கடமையாற்றினர். இப்பொழுது கிளான் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவராகவும் வனத்தில் நெற்செய்கை குழு அங்கத்தவராகவும் இருக்கிறர்.

கலாச்சார, சமூக நிலையம் ஒன்று கட்டுவதற்கு காணி நன்கொடை செய்த திரு. கந்தையா ஒரு தன்னலம் கருதாத சமுகத்தொண்டர் என்று பொதுமக்களால் மதிக்கப்படுபவர்.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 இன்றையநிகழ்ச்சிகள், 7-30 குரல்வகை, 7-45 தோத்திரப்பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 தொழிலாளர் வேளை.

இரவு 6-15 பஜனை, 6-45 கிராம சஞ்சிகை, 7-15 முத்திநெறி- சைவசஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 வாய்ப்பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

## இடமாற்றம்

பளை, வியாழன்

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் மூன்று வருடகாலமாக சேவைபுரிந்துவந்த காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளை இம்மாதம் 16-ம் திகதி தொடக்கம் கோப்பாய் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பஸ்ஸில் சாராயம்

முல்லைத்தீவு, வியாழன்

நீர்கொழும்பிலிருந்து முல்லைத்தீவு ஊடாக நாயாறு செல்லும் இ.போ. ச. பஸ்ஸில் வடிசாராயம் கடத்தப்படுவதாகத் தகவல்கிடைத்ததன் பேரில் முல்லைத்தீவுக்கு நேற்றுமாலை வந்த நீர்கொழும்பு பஸ் வண்டியை முல்லைத்தீவுக்கலால் பரிசோதகர் திரு.எம்.என். இஸ்மாயில் தலைமையில் சென்ற கலால் கோஷ்டியினர் சோதனை செய்து 360 ரூபா வடிசாராயம் பஸ்ஸில் இருக்கக் கண்டு பறிமுதல் செய்தனர். சந்தேகத்தின் பேரில் பெண்மணி ஒருவரைக் கைது செய்தனர். இம்மாதம் 23ம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றத்தில் ஆஜராகும்படி பிணையில் விட்டனர்.

## கூப்பன் மோசடி வழக்கு

### இரு எதிரிகளும் விடுதலை

சாவகச்சேரி, வியாழன்

கிளிநொச்சி கூப்பன் மோசடி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த தந்தையும் மகளும் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு.கே.விக்னராஜாவால் விசாரணை முடிவில் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கில் ஆனையிறவைச்சேர்ந்த சிலம்புக்கவுண்டர் சங்கிலி, இவர்மகள் ஜெயலஷ்சுமி [16வயது] ஆகியஇருவரும் 1963-ம் ஆண்டில் கூப்பனை மோசடி செய்துகள்ளக்கூப்பன் பாவித்ததாக கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி தரப்பில் அட்வகேட் திரு. எஸ். ஜெயக்கொடி புறக்டர் எஸ்.கே. திரவியநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜராகியிருந்தார். வழக்காளி தரப்பில் கிளிநொச்சி முன்னள் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் சி. என். பொன்னம்பலம் வழக்கை நடத்தினர்.

கடந்த பலமாதங்களாக இவ்வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வந்தது.

சென்ற செவ்வாய்க்கிழமை தீர்ப்பிற்காக வழக்கெடுக்கப்பட்டபோது எதிரி தரப்பு வழக்கறிஞர் தமது தொகுப்புரையை நிகழ்த்தினர். முடிவில் சாட்சியங்களனைத்தையும் பரிசிலனை செய்த மாஜிஸ்திரேட் ஜெயலட்சுமியை விடுதலைசெய்து பின்னர் பெண்ணின் தந்தையை எச்சரித்து விடுதலை செய்தார்.

## குப்பை மேட்டில் கடிகாரம்

சுழிபுரம், வியா.

சுழிபுரம் மேற்கு வல்லிபுரம் ஆறுமுகம் என்பவரின் வீட்டுச் சுவரில் மாட்டப்பட்டிருந்த சுவர் மணிக்கூடு களவுபோய்விட்டதாக கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னதாக சங்கானைப் பொலிசாரிடம்முறைப்பாடு செய்யப்பட்டது. களவுபோன மணிக்கூடு வல்லிபுரம் ஆறுமுகம் வளவிலுள்ள குப்பை மேட்டில் காணப்பட்டது.

## இலக்கியமன்ற நிர்வாகிகள்

வெள்ளவத்தை, வியாழன்

இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத் தமிழ் இலக்கியமன்றத்தின் 1967-68ம்ஆண்டு நிர்வாகக்குழு அங்கத்தவர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்-திரு. த. குலஞானம், உபதலைவர்- திரு.ஜி. எஸ். தர்மராசா, செயலாளர்-திரு.ஆர் வி. பொன்னம்பலம், உபசெயலாளர்- திரு.எஸ். சண்முகநாதன், பொருளாளர்-திரு. வே.கந்தையா, உபபொருளாளர்கள்- திருவாளர்கள்: பரராசசிங்கம், வே. அருணசலம். நூலகநிர்வாகி- திரு. அ. சோமசுந்தரம், உபநிர்வாகி -திரு. ந.ஈஸ்வரநாதன், புத்தகக்குழு விசேஷ அங்கத்தவர்-திரு.மு. நேமிநாதன், கௌரவ கணக்காய்வாளர்கள்- திருவாளர்கள்: சபாநாதன், ம நவரத்தினம். நிர்வாகக்குழு அங்கத்தவர்கள்- திருவாளர்கள்: தே. செல்வரத்தினம், ச. பொன்னம்பலம், வ. முருகப்பன்.


யானை மார்க்

சூடம்




இலங்கையிலேயே தயாரிக்கப்பட்டு முதன்முறையாக இலங்கையிலேயே டின்களில் அடைக்கப்படும் உன்னதமான கற்பூரவில்லைகள். இறக்குமதியாகும் மற்றெந்தக் கற்பூரவில்லைகளுக்கோ, டின்களுக்கோ எந்த வகையிலும் சளைக்காத உயரியதரச் சிறப்புடையவை.

ஒவ்வொரு 3|4 இறுத்தல் டின்னிலும் 960 வில்லைகள்.

இது தவிர வேறு அளவான பக்கட்டுகளும் உண்டு.

எங்கும் கிடைக்கும்

கற்பூரம் வாங்கும் போது

யானை மார்க் டின் சூடம்

என்று கேட்டு வாங்குங்கள்.

யாழ்ப்பாணத்தில் விநியோகஸ்தர்கள்;-

A. வைத்திலிங்கம் அன் கோ.,

45, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்கள்:

ஊவா கற்பூரத் தொழிற்சாலை



அனுபவமுள்ள வைத்தியரின்

மேற்பார்வையில்

சித்த வைத்திய மருந்துகள்

ஆயுர் வேத மருந்துகள்

மருந்துச் சரக்குகள்

—கிடைக்குமிடம்:—

சுந்தரம் பிறதர்ஸ்

மருந்துக்கடை

[புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை]

73, மின்சாரநிலைய வீதி,


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



நவீன சாதனங்களுடன் அமைக்கப் பெற்றுள்ள 'ஞானம்ஸ்' புகைப்படக்கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாண மாவட்ட அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா சென்ற திங்கட்கிழமை திறந்துவைத்தார்.

# சுகாதார வார விழா போட்டி முடிவுகள்

உடுவில், வியா.

சுகாதாரவாரத்தையொட்டி, உடுவில் கிராம சபையும், சுகாதாரவார கொண்டாட்டச் சபையும் சேர்ந்து உடுவில் வட்டார பாடசாலைகளுக்கிடையே பேச்சு, பாட்டு, நடனம், நாடகம் ஆகிய போட்டிகளை நடத்தின.

போட்டிகள் யாவும் உடுவில் திறந்தவெளியரங்கில் நடத்தப்பட்டன. உடுவில் கிராமசபைத்தலைவர் திரு. சி. முத்துலிங்கம் தலைமை வகித்துப்பேசுகையில், நமது பிள்ளைகள் பலவித நோய்களுக்குமுள்ளாகக் காரணம் அவர்கள் வளர்ச்சிக்கு வேண்டிய புஷ்டியான உணவுகள் ஊட்டப்படாமையே என்றும், சொகுசான வாய்க்கு இதமான வெளிநாட்டு உணவுகளை விடுத்து நமது தேசிய பயிரான பனைப்பொருட்களால் தயாராகும் உணவுகளையும், மற்றும் நாட்டு இலை கறி வகைகளையும் உட்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

எல்லாப் போட்டிகளிலும் பல பாடசாலைகள் பங்கு பற்றின. போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற சில பாடசாலைகள் பின்வருமாறு-

**பேச்சுப்போட்டி**

மேற்பிரிவு- உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, தாவடி தமிழ்க்கலவன்பாடசாலை, இணுவில் சைவப்பிரகாசவித்தியாசாலை.

கீழ்ப்பிரிவு- தாவடிதமிழ்க் கலவன் பாடசாலை, இணுவில் சைவப் பிரகாசவித்தியாசாலை.

**பாட்டுப்போட்டி**

மேற்பிரிவு-தாவடிதமிழ்க் கலவன் பாடசாலை, உடுவில் முருகமூர்த்திவித்தியாசாலை, இணுவில் சைவப் பிரகாசவித்தியாசாலை.

கீழ்ப்பிரிவு- இணுவில் அமெரிக்கமிசன் பாடசாலை, தாவடி தமிழ்க்கலவன் பாடசாலை, இணுவில் சைவப்பிரகாசவித்தியாசாலை.

**நடனப்போட்டி**

மேற்பிரிவு- இணுவில் சைவப்பிரகாசவித்தியாசாலை.

**நாடகப்போட்டி**

மேற்பிரிவு தாவடி தமிழ்க் கலவன் பாடசாலை, இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வலிகாமம் வடக்குப் பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி திரு. ஆ. பொன்னுச்சாமி பரிசுகள் வழங்கினர்.

# வேம்படி மகளிரின் புதிய சாதனைகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியின் இல்லங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப்போட்டியில் இம்முறை 9 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. ஹோன்பி, லித், ஸ்நோகிறவ், கிறீடி ஆகிய இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் ஹோன்பி இல்லம் 140 புள்ளிகள் பெற்று சாம்பியனானது. மற்றும் லித் இல்லம் 118 புள்ளிகளையும், ஸ்நோகிறவ் 97 புள்ளிகளையும், கிறீடி 70 புள்ளிகளையும் பெற்றன.

மத்திய கல்லூரி மைதானத்தில் திருமதி பி. பன்ஹர் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப்போட்டியில் மேற்பிரிவுச் சாம்பியன்களாக செல்விகள் அருந்தவராணி, குணநாம்பிகை, ரேவதி ஆகியோரும், மத்திய பிரிவுச் சாம்பியனாக செல்வி மகேஸ்வரி சுவாமியும், கீழ்ப்பிரிவில் ஜெயந்தாவும் தெரிவுசெய்யப்பட்டனர். சிலவிளையாட்டுகளில் வெற்றி பெற்ற வீராங்கனைகளின் விபரங்கள் பின்வருமாறு:

மேற்பிரிவு உயரம்பாய்தல்: பானு ஸ்ரீமணி, அருந்தவராணி, சந்திரா.

மத்தியபிரிவு: வாமி, மலைமகள், மகேஸ்வரி.

கீழ்ப்பிரிவு பந்தெறிதல்: சாந்தி குமாரி, சிவதானி, ஸ்ரீஸ்கந்தகுமாரி.

மேற்பிரிவு நீளம்பாய்தல்: அருந்தவராணி, சாந்தா, கனகாம்பிகை.

கீழ்ப்பிரிவு உயரம்பாய்தல்: தேவகி, வசந்தி, சாந்தினி.

மேற்பிரிவு குண்டெறிதல்: குணநாம்பிகை, சுலோசனா, ஜெயபூஜனி. மத்தியபிரிவு- மகேஸ்வரி, புனிதவதி, லலிதா.

கீழ்ப்பிரிவு நீளம்பாய்தல்: சகுந்தலா, அற்புதநிதி, ஜெயந்தா, மத்தியபிரிவு- நித்தியவதி, மாலதி.மாலினி

ஈட்டி எறிதல் மேற்பிரிவு: குணநாம்பிகை, ஜெயபூஜனி, சுலோசனா, மத்திய பிரிவு- மகேஸ்வரி, ரஞ்ஜினி, நித்தியவதி.

மேற்பிரிவு 100 யார் ஓட்டம்; ரேவதி, உருத்திராணி, தேவரஞ்ஜினி, அதி மேற் பிரிவு: மனோகரி, சுந்தரேஸ்வரி, விக்னேஸ்வரி, மத்திய பிரிவு: மனோகரி, மலைமகள், நித்தியவதி.

மத்திய பிரிவு 250 யார் ஓட்டம்: மனோகரி, மலைமகள், மாலதி.

மேற்பிரிவு 200 யார் ஓட்டம்: ரேவதி, அருந்தவராணி, சந்திரா.

---

## சமய வகுப்பு

மல்லாவி, வியா.

யோகபுரம் பாரதி கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சமயவகுப்பு நடைபெறுகின்றது.

சாவகச்சேரி

# மகளிர் மகாவித்தியாலய வருடாந்தவிளையாட்டுபோட்டி

## பவானி இல்லம வெற்றி

சாவகச்சேரி, வியா.

சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய வருடாந்த விளையாட்டுப்போட்டி அவ் வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. போட்டி முடிவுகள் பின்வருமாறு:

அணிநடை: மந்தாகினி இல்லம். பவானி இல்லம், பகீரதி இல்லம்.

**கீழ்ப் பிரிவு**

100 யார் ஓட்டம்: மங்களாதேவி நடராசா, இரத்தினேஸ்வரி நடராசா. ராஜேஸ்வரி நல்லதம்பி.

நொண்டி ஓட்டம்: மந்தாகினி, பகீரதி, பவானி.

75 யார் ஓட்டம்: மங்களாதேவி நடராசா, இரத்தினேஸ்வரி நடராசா. ராஜேஸ்வரி நல்லதம்பி.

தடை ஓட்டம்: சத்தியராணி பஞ்சாட்சரம், புஷ்பலதா தம்பித்துரை, பத்மராணி கனகராஜா.

அஞ்சல் ஓட்டம்: மந்தாயினி இல்லம், பவானி இல்லம், பகீரதி இல்லம்.

440யார் ஓட்டம்: பவானி இல்லம், மந்தாகினிஇல்லம். பகீரதி இல்லம்.

தடைஓட்டம்: அமரநாத் அமரசிங்கம், ஏகன் இரத்தினராஜா, ஜோய் கண்ட்.

75 யார் ஓட்டம்: கோவிராஜா நடராசா, ஜெயராஜ்

(8- ம்பக்கம் பார்க்க)


**கலங்கள் வேறு....**

**உள்ளடக்கம் ஒன்றே,**




இடதுபுறத்தில் காணப்படுவது போன்ற புதிய பார்க்கர் சூப்பர் குயிங் காகிதக் கலங்கள் பலவற்றை நீங்கள் விரைவில் காண்பீர்கள். உங்களுக்கு பரிச்சயமான பழைய கலங்களிலும் பார்க்கர் சூப்பர் குயிங் கிடைக்கும் தான். எந்தக் கலத்தைத் தேர்ந்தெடுத்தாலும், கழிவுப் பொருள்களைக் கரைப்பதும் எழுதும் போதே பேனாவைத் துப்புரவு செய்வதுமாகிய சோல்வ் - எக்ஸ் என்னும் சேர்மானப் பொருள் கொண்ட ஒரே மையாகிய பார்க்கர் சூப்பர் குயிங் உங்களுக்குக் கிடைக்கும்.




**எல்லாப் பேனைக்களுக்கும் சிறந்த மை இதுவே.**

**மகாராஜா ஓர்கனைசேஷன் லிமிடெட், பங்க்ஸால் வீதி, கொழும்பு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். விசேஷ ஆணையாளரின்

# ஓராண்டு சாதனைகள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண மாநகர சபை 1966-ம் ஆண்டு மே மாதம் 29-ம் திகதி கலைக்கப்பட்டது. அடுத்த நாள் தொடக்கம் மூன்று விசேஷ ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

இவர்களுடைய ஆட்சியில் இந்த ஒரு வருடமாக நிகழ்ந்த யாழ்ப்பாண நகர அபிவிருத்தி சாதனைகள் அவர்களால் வெளியிடப்பட்ட ஒரு நிர்வாக அறிக்கையில் தரப்பட்டுள்ளது. அவற்றுள் சில பின்வருமாறு:

**மாதிரிச் சந்தை**

பழைய நகர சபை மீது கொந்தராத்துக் காரர் தொடர்ந்தவழக்கு இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு.எஸ். தம்பித்துரையின் மத்தியஸ்தத்துக்கு விடப்பட்டு, அவர்கள் கோரிய 97 ஆயிரம் நஷ்டஈட்டுக்கு பதில் 7,500 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தொகை செலுத்தப்பட்டது.

அரசாங்க நகர நிர்மாணி கொடுத்த திட்டப் பிரகாரம் புதிய மாதிரி சந்தை வேலைகள் விரைவில் ஆரம்பமாகும். இவ்வருடம் ஒதுக்கப் பட்டுள்ள 2 லட்சம் ரூபாயில் சந்தையின் முதல் கட்டத்தை துவங்குவதற்கு இலங்கை முழுவதிலும் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட இருக்கின்றன.

**பஸ்நிலையம்**

புதிய பஸ்காலை மின்சார நிலையத்துக்கு அருகாமையில் நிறுவப்பட்டது. இ. போ. ச. அளித்த ஆறு பிரயாணிகள் தங்கு நிலையங்கள் அமைக்கப்பட்டன. நீர், மின்சார வசதிகள் வழங்கப்பட்டன.

தெரு வீதிகள்: பின்வரும் வீதிகள் இந்த வருடத்தில் பெருப்பிக்கப்பட்டன:- கஸ்தூரியார் வீதி, பண்ணை சுற்று வீதி, துண்டி வீதி, நாவலர் தெரு, ராக்கா தெரு விக்ரோறியாதெரு, ஆஸ்பத்திரிவீதி 3-ம் குறுக்குத்தெரு இப்படி இன்னும் சில.

**சாக்கடைகள்**

நாவலர் வீதி, கோயில் வீதி, பாஷையூர் தெரு, சிவன் பண்ணை வீதி முதலிய வீதிகளிலுள்ள சாக்கடைகள் கட்டி முடிக்கப்பட்டன.

**லொறிக்காலை**

வண்ணான் குளத்தின் மேற்குப் பகுதியில் ஒரு பாகம் நிரப்பப்பட்டு அங்கே ஒரு கார், லொறிக்காலை அமைக்கப்படுகிறது.

**தண்ணீர் வசதி**

குழாய்மூலம் நகரவாசிகளுக்கு அளிக்கப்படும் தண்ணீர் தொகை ஒருநாளைக்கு 2 லட்சம் கலன்களிலிருந்து 3 லட்சமாக அதிகரிக்கப்பட்டது.

**மணிக்கூண்டு**

பலவருடங்களுக்கு பிறகு முற்றவெளி மணிக்கூண்டுக்கு புதிய பூச்சு அடிக்கப்பட்டது.

**பொதுமக்கள் நூல்நிலையம்**

வழக்கமான 10000 ரூபாவைத்தவிர, பத்திரிகைகளும் புத்தகங்களும் வாங்குவதற்கு விசேஷ ஆணையாளர்களால் மேலும் 12,750 ரூபா ஒதுக்கப்பட்டது.

**டாக்டர் சுப்பிரமணியம் பூங்கா**

புதிய புஷ்பமரங்களும், வெளிச்சங்களும் நீர்த்தடாகங்களும் அமைக்கப்பட்டு, பூங்கா இப்பொழுது புதுப் பொலிவுடன்விளங்குகிறது.

## மகளிர் . . .

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

தோமஸ் ஏகன் இரத்தின ராஜா.

நண்டுநடை; கோவிராஜ் நடராசா. ஏகன் இரத்தின ராஜா, சஞ்சிலன் சிவச்சந்திரன்.

**மத்தியபிரிவு**

100 யார் ஓட்டம்: கமலாதேவி வேலுப்பிள்ளை, பத்மாவதி முருகேசு, சற்குணதேவி ராமு.

தண்ணீரால் 'கப்' நிரப்புதல்: மந்தாகினிஇல்லம், பகீரதிஇல்லம், பவானிஇல்லம்.

150 யார் ஓட்டம்: கமலாதேவி வேலுப்பிள்ளை, மனோரதி அருளானந்தம், சற்குணதேவி, ராமு.

440 யார் ஓட்டம்: பவானி இல்லம், பகீரதி இல்லம், மந்தாகினிஇல்லம்.

880 யார் ஓட்டம்: பவானி இல்லம், பகீரதி இல்லம், மந்தாகினிஇல்லம்.

**மேற்பிரிவு**

100 யார் ஓட்டம்: கமலாதேவி இராஜரத்தினம், யோகம்மா பசுபதி, கமலாதேவி நாகமுத்து.

அஞ்சலோட்டம்: பவானி இல்லம், மந்தாகினிஇல்லம், பகீரதிஇல்லம்.

220 யார் ஓட்டம்: யோகம்மா பசுபதி, சீதா மாடசாமி, கமலாதேவி நாகமுத்து.

440 யார் ஓட்டம்: பவானி இல்லம், மந்தாகினி இல்லம், பகீரதி இல்லம்.

880 யார் ஓட்டம்: பவானி இல்லம், மந்தாகினிஇல்லம், பகீரதிஇல்லம்.

கயிறிழுத்தல்: மந்தாகினி இல்லம், பவானிஇல்லம், பகீரதி இல்லம்.

இவ்வருட சாம்பியன்கள்: மத்தியபிரிவு: கமலா வேலுப்பிள்ளை -பவானி இல்லம்.

மேற்பிரிவு: யோகம்மா பசுபதி, மந்தாகினி இல்லம், பவானிஇல்லம் 186 1/2 புள்ளிகளும். மந்தாகினி இல்லம் 145 1/2 புள்ளிகளும், பகீரதிஇல்லம் 109 புள்ளிகளும் பெற்றன. பவானிஇல்லம் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டது. [illegible]ரோருக்கு திருமதி வி. என். நவரத்தினம் பரிசில்களை வழங்கினர்.

## அபராதம்

சாவகச்சேரி, வியா,

சாவகச்சேரியிலுள்ள அல்லாரையைச் சேர்ந்த சின்னத்தம்பி வல்தி என்பவர் அதே ஊரைச் சேர்ந்த ரி. மாணிக்கம் என்பவருக்குக் கத்தியால் வெட்ட எத்தனித்ததாகவும் அதே சமயத்தில் அடித்துக் காயம் விளைவித்ததாகவும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 125 ரூபா அபராதம் அல்லது ஆறு வாரச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

## பாதிக்கப்படவில்லை

புதுடில்லி, ஜூன் 15

மேற்கு ஆசிய யுத்தத்தில் அரபு நாடுகளை இந்தியா ஆதரித்ததால் இந்தியாவுக்கு அமெரிக்கா அளித்து வந்த உணவு உதவி பாதிக்கப்படவில்லை என்று இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இசை விழாக்களும

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கடிதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பண்ணிசை பாடுவோர் எல்லாரும் என்ன செய்கிறார்கள்? சைவக் கோவில்களில் பண்பாடுவதற்கு ஒருவருமில்லை என்று பலர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். கோவில்களில் தினந்தோறும் இவர்களுடைய கச்சேரிகளை ஒழுங்கு பண்ணினால் சைவத்துக்கும் இசைக்கும் செய்யும் பெரிய தொண்டல்லவோ? இனி, திருமுறைபாடுவோர் சமயானுட்டானங்களை உண்மையாகக் கைக்கொள்ளுபவர்களாக இருக்காவிட்டால் திருமுறை ஓதுவதினால் வரும் முழுப்பயனையும் பெறமுடியுமா? மது அருந்துதல் சைவானுஷ்டானத்துக்குப் புறம்பானது. மது அருந்தாமல் திருமுறை ஓதமுடியாதவர்கள் திருமுறைகளைப் பாடி எவ்வாறு உள்ளத்துக்கோ அல்லது உயிருக்கோ இன்பம்தரமுடியும், இவற்றையெல்லாம் நாமனைவரும் சிந்தித்து இசைக்கலையையும் ஆன்மீகத்தையும் இணைபிரியாமற்செய்ய உழைப்போமாக.

எமது சங்கீத வித்துவான்கள் ஒவ்வொருவரும் தங்கள் கச்சேரிகளில் திருமுறைப் பாடல்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என மிகவும் பணிவுடன்வேண்டுகிறேன்.

திருமுறைகளை இசைப்பவர்களும் இறையன்புடன் எங்கும்திருமுறைகளைப்பாடவும் வேண்டும்.

நா ப. பாலசந்திரன்

## பதவியைக்கூட..

1-ம்பக்கத் தொடர்ச்சி]

அரசியல் செல்வாக்கிற்காக சிலர் பெற முயற்சிக்கும் மாவட்டசபையினால் தமிழருக்குப் பெரும் ஆபத்து உண்டு.

உண்மையில் முழு அதிகாரம் உள்ள நீர்ப்பாசனம், கல்வி குடியேற்றம் ஆகியவை சம்பந்தமான அதிகாரங்கள் அடங்கிய மாவட்டசபை மசோதா வந்தால் நான் ஆதரித்துவிட்டு என் பதவியையும் ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன். எனக்குத் தெரிந்தளவில் உத்தேச மாவட்டசபை வெறும் கண்துடைப்பு மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம்போல் தான் இருக்கும்.

இலங்கையிலுள்ள 22 மாவட்டங்களில் 16 சிங்கள பிரதேசத்தில் உண்டு. தமிழ்ப் பிரதேசத்தில் உள்ள 6 மாவட்டங்களிலும் யாழ்ப்பாணத்திலுள்ள மாவட்டசபையில் மட்டும் தான் தமிழ் நிர்வாகம் முழுக்க நடைபெறும். ஆனால் யாழ்ப்பாண மாவட்டசபை, மற்றும் மாவட்ட சபைகளுடனும் மத்திய அரசாங்கத்துடனும் தனிச்சிங்களத்தில் தான் கடிதத் தொடர்புகள் வைத்துக்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள மாவட்டசபையில் தமிழில் நிர்வாகம் நடந்தால் சிங்களப் பிரதேசங்களில் உள்ள 16 மாவட்டசபைகளில் தனிச்சிங்களம் நடைபெறும். இதனால் இன்னும் 15 வருட காலத்தில் தெற்கில் உள்ள தமிழர்கள் சிங்களவராக மாறிவிடுவர். தெற்கில் உள்ள தமிழ் அரசாங்க ஊழியர் சிங்களத்தில் கருமமாற்ற நேரிடும். அங்கு இரண்டாந்தரப் பிரஜையாக கணிக்கப்படுவார். வேலையில்லாத் திண்டாட்டம் சிங்களவர் மத்தியிலும் இருப்பதால் தெற்கில் புதிய நியமனங்கள் சிங்களவருக்குத் தான் கிடைக்கும். ஒரு தமிழனுவது தெற்கில் புதிதாக [illegible] யாது. மாவட்டசபை வந்த பின் வேறு ஒரு அரசாங்கம் ஆட்

யாழ். மாநகரசபை

# வட்டார நிர்ணயத்தின்பின் தேர்தலை நடத்துக'

## தமிழ்க் காங்கிரஸ் பிரதமரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

புதிய வட்டார நிர்ணயக் கமிஷன் விசாரணை நடைபெற்று வட்டாரங்கள் பிரிக்கப்பட்ட பின்பே யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தல் நடைபெறவேண்டுமென்று பிரதமரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம், தமிழ்க் காங்கிரஸ் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது

இக்கூட்டம், யாழ்ப்பாணத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

யாழ்ப்பாண நகரசபைத் தேர்தலை விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், மார்ட்டின் கமிஷன் அறிக்கையை அமுல் செய்யாமல், புதிய கமிஷன் விசாரணை நடத்தவேண்டுமென அங்கத்தவர்கள் தெரிவித்தனராம்.

தாம் இருக்குமட்டும் மார்ட்டின் கமிஷன் அறிக்கையை அமுல் நடத்தக் கூடாதெனக் கூறியதாகவும், இதனைப் பிரதமர் ஏற்றுக்கொண்டாரென்றும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அங்கத்தவர்களுக்கு கூறியதாக அறியப்படுகிறது.

தொகுவாரியாகப் பிரசாரக்கூட்டங்கள் நடத்த வேண்டுமெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வருடாந்த மகாநாட்டை வவனியா அல்லது திருக்கோணமலையில் வைப்பது என்பது பற்றியும் அதற்கான திகதி பற்றியும் அடுத்தகமிட்டிக்கூட்டத்தில் முடிவு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. பிரதமர் திருடட்லிசேனநாயக்கா இலங்கை திரும்பிய பின்னரே மகாநாட்டை நடத்த வேண்டுமென கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாம்.

# மட்டக்களப்பின் முதல் மேயர் யார்?

— நமது நிருபர் திருமதி செல்வம் தருமராசா -

மட்டக்களப்பு, வியாழன்

**மட்டக்களப்பின் முதலாவது நகரமேயர் யார்? மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரையா? மட்டக்களப்பின் நகரசபைத் தலைவராக இதுவரை பதவிவகித்து வந்த திரு. ஜே. எல். திஸவீரசிங்கமா?**

மட்டக்களப்பு மாநகர சபை அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டபின் நேற்று நடைபெற்ற முதலாவது தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்டபின் மட்டக்களப்பு மக்கள் மத்தியில் மேற்கண்ட கேள்வியே எழுந்துள்ளது.

மட்டக்களப்பு நகர சபைக்கு முன்னர் நடைபெற்ற தேர்தல் முடிந்ததும் தலைவர் பதவிக்கு திரு இராசதுரையும் திரு. திஸவீரசிங்கமும் போட்டியிட்டனர். இந்தப் போட்டியில் திரு திஸவீரசிங்கத்துக்கே வெற்றி கிடைத்தது.

மட்டக்களப்பு மாநகர சபைத் தேர்தல் முடிவடைந்து விட்டது. மேயர்பகுதிக்கு திரு. இராசதுரையும், திரு. திஸவீரசிங்கமும் போட்டியிடுவதும் நிச்சயமாகி விட்டது. எனினும் இன்றுள்ள நிலையில் திரு. திஸவீரசிங்கமே முதல்மேயராவதற்கான வாய்ப்புக்கள் அதிகமிருப்பதாகக்கூறப்படுகிறது.

## சிங்களத்தேர்ச்சி..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அங்கத்தவர்கள் வந்திருந்தனர்.

சங்கப் பொதுக்காரியதரிசி திரு. எஸ். அருமைநாயகம் பேசும்போது கூறியாவது:

சிறு சேவயாளருக்கு சிங்கள தேர்ச்சியிலிருந்து விதிவிலக்கு அளிப்பதில் சங்கம் வெற்றி கண்டுள்ளது. ஆங்கிலத்தில் வரும் கடிதங்களுக்கு சில அங்கத்தவர்கள் ஆங்கிலத்தி பதில் எழுதினார்கள். இதனால்சங்கம் எடுத்துவரும் நடவடிக்கை பாதிக்கப்படுகிறது. அங்கத்தவர்கள் தங்கள் மொழியிலேயே தொடர்புகொள்ள முன்வரவேண்டும்.

பிற்பகல் புதிய தலைவர் திரு. பி. தேவராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. உத்தியோகத்தர் விபரம் வருமாறு: தலைவர்- திரு. பி. தேவராசா, உப-தலைவர்கள்- திருவாளர்கள் செந்தில்நாயகம், வி. சிவலிங்கம், அருளானந்தம், பொதுக் காரியதரிசி திரு. எஸ். அருமைநாயகம், உப காரியதரிசிகள்- திருவாளர்கள்- எம். ஐயன்னு, சிவசுப்பிரமணியம், தனதிகாரி- இம்மானுவேல்.

சிக்கு வந்தால், யாழ்ப்பாண மாவட்டசபை பாரபட்சமாகநடத்தப்படக்கூடும்இதனால் தமிழர் பாதிக்கப்படுவார்கள்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று மாலை 6 மணி முதல் 7 மணி வரை திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் ஆசிரியர் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் பூஜையும் பின் உற்சவமும் நடைபெறும்.

## துரோகமிழைக்..,

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போது, சில கோரிக்கைகளை வைத்து பிரதமரை ஆதரித்ததாகவும், தங்களை நம்பி அரசாங்கம் அமைத்த பிரதமரை கைவிடுவது தமிழரின் பண்பாடல்லவென்றும், தமிழருக்குத் துரோகமிழைக்கப்படுவதென அறிந்தால் நிச்சயம் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவோமென்றும், வெளியேறவேண்டிய அவசியம் தற்பொழுது ஏற்படவில்லையென்றும் கூறினர்.

வட்டுக்கோட்டை எம்.பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசும்போது, தற்பொழுது நிறைவேற்றப்பட்ட மசோதாவினால் சுமார் 3 லட்சம் இந்தியர் பிரஜா உரிமை பெறுவார்களென்றும் கூறினர்.

கோப்பாய் எம். பி. திரு. கதிரவேற்பிள்ளை, திருமதி மங்கையர்க்கரசி உட்பட பலர் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org